Registered as a Newspaper in Ceylon

★ ★ விலை சதம் 15

ஈழநாடு

EELANADU

மலர் 10
இதழ் 330
National Tamil Daily
தேசிய தினசரி

[illegible] மார்கழி 24 ஷவ்வால் 17 செவ்வாய்க்கிழமை (7-1-69)

இன்றே விஜயம் செய்யுங்கள்

ம. சேனாதிராஜா

பல் கட்டுபவர்

கண்பரிசோதகர்

9, மெயின் வீதி - யாழ்ப்பாணம்.

சாம்ராஜ்ய பிரதமர்கள் மகாநாடு இன்று ஆரம்பம்

பேரன் பிரேதத்தைக் கொண்டு வந்தவர் கடலில் மூழ்கி மரணம்

நெடுந்தீவு, செவ்வாய் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலிருந்து நெடுந்தீவிற்கு தமது பேரனின் பிரேதத்தை கொண்டுவந்த 32 வயது உடையவரும் நான்கு பிள்ளைகளுக்குத் தந்தையுமான நெடுந்தீவு மேற்கு 8-ம் வட்டாரத்தைச் சேர்ந்த விசுவலிங்கம் கார்த்திகேசு என்பவர் நெடுந்தீவு கடலில் வள்ளம் ஒன்றில் வந்து கொண்டிருக்கையில் தவறிக் கடலில் விழுந்து மரணமானார்.

இரவு வேளையாக இருந்த போதிலும் வள்ளக்காரர் தம்மால் ஆனமுயற்சிகளைக் கையாண்டும் பலனளிக்கவில்லை. கடுங்காற்றுடன் மழையும் பெய்ததனால் ஒன்றுமே செய்யமுடியாமல் போய் விட்டதாம். இதுவரை அவரின் பிரேதம் கண்டெடுக்கப்படவில்லை. பொலிஸாரும் கடற்படையினரும் சடலத்தை தேடி வருகிறனர்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் நிகழ்ந்தது.

சம்பள உயர்வு தீர்மானம் பிரதமர் திரும்பியபின்தான்

கொழும்பு திங்கள் அரசாங்க ஊழியர் சம்பள உயர்வு பற்றி நேற்று முன்தினம் கூடிய மந்திரி சபை எந்த முடிவையும் எடுக்கவில்லை.

சாம்ராஜ்ய பிரதமர்கள் மகாநாட்டுக்கு, பிரதமர் டட்லி சென்றுள்ளதால், அவர் இம்மாதம் 18-ந் திகதி நாடு திரும்பிய பின்னரே சம்பள உயர்வு, இடைக்கால அலவன்ஸ் ஆகியன பற்றித் தீர்மானிப்பதென மந்திரிசபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இந்த முடிவு உடனடியாக தபால் தந்தி ஊழியர் சங்கத்துக்கு அறிவிக்கப்பட்டது.

பிரதமர் நாடுதிரும்பும் வரையும் மந்திரி சபையினதும், அரசாங்கத்தினதும் தற்காலிக தலைவராக ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா இருப்பார். திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா, கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவ முன்னிலையில் தற்காலிக அரசாங்க தலைவராக நேற்று பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

'செல்வந்த-வறிய நாடுகள் இடைவெளி குறைய வேண்டும்'

பிரதமர் டட்லி அபிப்பிராயம்

லண்டன், ஜன 7

இன்று லண்டனில் ஆரம்பமாகும் சாம்ராஜ்ய பிரதமர்கள் மகாநாட்டில் ஆசிய ஆபிரிக்க நாடுகளில் குடியேற்றங்களைக் குறைப்பது பற்றிய விஷயம், ரொடீஷியா பிரச்னை பிரிட்டனில் குடியேற்றம் கிழக்கு மேற்கு உறவுகள், வியட்னாம், வர்த்தக நாணயப்பிரச்னைகள் உலக நிதிநெருக்கடி மேற்கு ஆசியப்பிரச்னை உட்பட ஐ. நா. சபையை எதிர்நோக்கும் பல பிரச்னைகள் பற்றி ஆராயப்படவிருக்கின்றன.

ரொடீஷியப்பிரச்னை

ரொடீஷிய பிரச்னை சம்பந்தமாக பாரதஇலங்கைப் பிரதமர்கள் உட்பட பல ஆசிய ஆபிரிக்க நாட்டுப் பிரதமர்கள் பிரதமர்கள் பிரிட்டனை தனது நடவடிக்கைகளைக் கடுமையாக்கும்படி வற்புறுத்தவிருக்கிறார்கள். இதன்போது காரசாரமான விவாதம் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இம்மகாநாட்டின் முன்னோடியாக 28 நாடுகளின் தலைவர்கள் சந்திப்பு நேற்று நடைபெற்றது. பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் திரு. மைக்கேல் ஸ்டுவார்ட் இவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

பிரதமர்கள் கருத்து

இலங்கைப்பிரதமர் திரு. டட்லி சேனநாயகா இங்கு நேற்று வந்து சேர்ந்தபோது அவருக்குமகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த வரவேற்பில் லண்டனிலுள்ள பல இலங்கையர்கள் கலந்து கொண்டனர்.

பிரதமர் திரு. டட்லி இங்கு பத்திரிகை நிருபர்களுக்களித்த பேட்டியில் செல்வந்த நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்கு மிடையே இருந்து வரும் இடைவெளி குறைய வேண்டுமெனத் தெரிவித்தார். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வளர்ச்சிக்கு உதவக்கூடிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமெனவும் அவர் கருத்து வெளியிட்டார்.

பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி பாதுகாப்புத்தளங்களின் நிலைகொண்டிருப்பது உலகின் நெருக்கடியைத் தோற்றுவிக்கவே வழிவகுக்குமெனவும் இவை தொடர்ந்து நீடித்திருப்பது விரும்பத்தக்கதல்ல எனவும்

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ் மாவட்ட மகளிர் சேவா சதனம்

யாழ்ப்பாணம், செவ் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பல பெண்கள் சமூக சேவை சங்கங்களையும் இணைத்து யாழ் மாவட்ட மகளிர் சேவா சங்கமென்ற ஒரு ஸ்தாபனத்தை ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயண் வருகிற 10-ந் திகதி மாலை 8 மணிக்கு ஆரம்பித்து வைத்துப் பேசுவார்.

ரப்பரை வாங்கவும் அரிசி தரவும் சீனா இணக்கம்

ஒப்பந்தம் இன்று கைச்சாத்தாகும்

கொழும்பு திங்கள் மூன்று நாட்களாக நடைபெற்று, எந்த முடிவும் எடுக்கப்படாதிருந்த இலங்கை-சீன அரிசி ரப்பர் ஒப்பந்தம் பற்றிய பேச்சுவார்த்தையில் ஒரு சமரச முடிவு எடுக்கப்பட்டது.

சீனாவிடமிருந்து ஒரு தொன் அரிசியை 51 பவுண் ஸ்டேர்லிங்கிற்கு புதிய ஒப்பந்தத்தின்கீழ் இலங்கை வாங்க ஒப்புக் கொண்டுள்ளது.

அதே வேளையில் இதற்கு முன்னர் வாங்கிய அதே தொகையான ரப்பரை இலங்கையிடமிருந்து வாங்க சீனா ஒப்புக்கொண்டுள்ளது. கடந்த ஆண்டுகளில் வாங்கிய இரண்டு லட்சம் தொன் அரிசியை இந்த ஒப்பந்தத்தின் படி மீண்டும் வாங்கும்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இலங்கை தூதகோஷ்டிக்கு வர்த்தக அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. பி. ஏ. சில்வா தலைமைவகித்தார். சீனாவின் சார்பில் வெளிநாட்டு வர்த்தகப் பிரதி அமைச்சர் திரு. லின் ஹாய் யுன் கலந்து கொண்டார்.

இலங்கை அரிசி உற்பத்தியில் இப்போது முன்னேற்றமடைந்துள்ளதால் சீனாவிடமிருந்து பெறும் அரிசியில் 50,000 தொன்னை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முயற்சி எடுக்கப்பட்டுள்ளன.

நாகர்கோவில் தேர்தல்

சென்னை, ஜனவரி 6 நாகர்கோவில் தேர்தல் நடைபெற்ற மறுதினமான 9-ந் திகதி வாக்குகள் எண்ணப்படும், நாகர்கோவில் நகரத்திலேயே 4 இடங்களில் வாக்குகள் எண்ணப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆசிரியர் பற்றாக்குறை வடபகுதியில் தலைதூக்குகிறது

யாழ்ப்பாணம், செவ். வடபகுதியில் பத்து வருடங்களுக்குமேல் கடமையாற்றிய ஆசிரியர்களை வெளி மாகாணங்களுக்கு இடமாற்றம் செய்ததைத் தொடர்ந்து ஆசிரியர் பற்றாக்குறை ஒன்று இங்கு தலைதூக்கியுள்ளது.

இவ்வருடம் முதல் இடமாற்றம் செய்யப்பட்ட பல ஆசிரியர்களும் இங்கிருந்து இன்னமும் செல்லாது தவிர்த்து நிற்பதே இதற்கு காரணமாக இருப்பதாக வடபகுதி கல்வி இலாகாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இங்கிருந்து ஆசிரியர்கள் இன்னமும் வெளி இடங்களுக்குச் செல்லாததால் வெளி இடங்களிலிருந்து இங்கு வர வேண்டிய ஆசிரியர்கள் இங்கு வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதே கல்லூரிகளில் ஆசிரியர் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுகின்றது.

இதனால் பல கல்லூரிகளில் மாணவர்களது கல்வி பாதிக்கப்படக்கூடிய நிலையும் ஏற்பட்டுள்ளதாம். ஜி. சீ. ஈ. இறுதிவகுப்பு மாணவர்களின் விசேஷ வகுப்புகளுக்கு இரு ஆசிரியர்களே சில கல்லூரிகளில் கல்வி கற்பிக்கின்றனராம்.

இதுபற்றி கல்வி அமைச்சுடன் இங்குள்ள கல்வி அதிகாரிகள் தொடர்பு கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. (ஈ.நி)

வரி விளம்பரம்

கல்வி

G. C. E. (O. L. மார்ச்/Dec. 1969) பரீட்சைகள் கணக்குப்பதிவை, [illegible] புகுமுகப் பரீட்சைகள் (J. T. O.) அரசாங்க சேவையாளர் சிங்கள தேர்ச்சி பரீட்சைகள் (காலை, மாலை) ஆரம்பமாகிவிட்டன. இருபாலாருக்கும் அனுமதி உண்டு. தங்குமிட வசதியும் உண்டு. யாழ். போதனா கல்லூரி, 15/1, மின்சார வீதி, யாழ்ப்பாணம். 456

விற்பனைக்கு

கார்:

நல்ல நிலைமையில் உள்ள EY 6000 தொடரிலக்க Vouxhall Wyvern விற்பனைக்குண்டு. விலாசம் 222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 459

காணவில்லை

மாதகலிலிருந்து பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரிக்குச் சென்ற ஆசிரியர் சின்னராசாவின் மகன் ஆனந்தராசா தனது மூக்குக்கண்ணாடியை உறையுடன் தவறவிட்டுவிட்டார். கண்டெடுத்தோர் ஆசிரியர் க. சின்னராசா மேற்கு மாதகல் என்னும் விலாசத்தாரிடம் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 460

தேவை

யாழ் நகர எல்லைக்குள் சைக்கிளில் மூலம் பத்திரிகை விநியோகம் செய்ய ஆள் தேவை. பிணைப்பணம் செலுத்தவேண்டும். சம்பளம் ரூபா 125/- 10-ம் திகதிக்குமுன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 200, C/o "ஈழநாடு", யாழ்ப்பாணம். 200

VACANCIES

1. Male Typist (English) (2) Experienced Accounts Clerk [English] Apply stating qualification, experience and salary required before 15th January Advt. no 461 Eelanadu, Jaffna. 461

[illegible]
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30
[illegible], போயா 3-30
சிவாஜி - பானுமதி
நடித்த
மக்களைப்பெற்ற
மகராசி

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி 6-30, 9-30
[illegible], போயா 2-30
ஜெமினி - வைஜயந்தி
நடித்த
தேன் நிலவு

வின்ஸர்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நம்பியார், அசோகன், நாகேஷ்
நடித்த
ரகசியப்போலிஸ் 115
[ஈஸ்ட்மென்கலர்]

6-வது வாரம்!
கிங்ஸ்லி [illegible] [illegible]
வெலிங்டன் விஜயா
மற்றும் பல [illegible] திரைகளில்



சிவாஜிகணேஷன் ★ தேவிகா
ராஜ்ஸ்ரீ நாகேஷ் சகஸ்ரநாமம்
நடித்த
நீலவானம்

மரண அறிவித்தல்

கதிரேசு

மலேசியா, சிரம்பானைச் சேர்ந்த திரு. கிறிஸ்ரி பூபதி கதிரேசு சிரம்பானில் இம்மாதம் 5-ந் திகதி காலமானார். இவர் [illegible] மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திரு. எஸ். ஏ. கதிரேசு, உரும்பராய் திருமதி [illegible] செல்லம் கதிரேசு, சிரம்பான், விஜி ஆசிரோவின் அருமைத் தந்தையாரும் மகேஸ்வரா ஜோர்ஜ்மோகன், கிரேஸ், யூனிஸ், ஐசக், உரும்பராய் ரூத், டேவிட் தனம், கதிரேசு, மாத்தளை அரசாங்க நில அளவையாளர் பி. ஜி. கதிரேசு, கொழும்பு துறைமுக கட்டுத்தாபனத்தைச் சேர்ந்த ஆர். வி. கதிரேசு, உரும்பராய் இந்துக்கல்லூரி ராணி, உரும்பராய் ஜீவி ஆசிரோவின் சகோதரரும் மலேசியாவைச் சேர்ந்த செல்லையா, தம்பிராஜா, டேவிட், குக், ரிபேக்கா, யாழ்ப்பாணம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பி. சந்திரன், யாழ்ப்பாணம் தந்திக் கந்தோரைச் சேர்ந்த வி. எம். செல்வராஜா, உரும்பராய் இந்துக்கல்லூரி கே. பொன்னம்பலம், வைத்தீஸ்வரா வித்தியாலயத்தைச் சேர்ந்த திருமதி சுந்தரலிங்கம், கொழும்பு துறைமுக கட்டுத்தாபனத்தைச் சேர்ந்த பி. ஜே. மயில்வாகனம், பரமேஸ்வரி, வனம், பபி, யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி, வண. பாலா [illegible] பிரகாசத்தின் மனைவியாரான திருமதி ஜோதி ஆசிரோவின் மைத்துனரும், மலேசியாவைச் சேர்ந்த வண. ஒஸ்வால்டின் மருமகனுமாவார். தகவல் டக்ளஸ் சிரம்பானில். 1139

வரிப்பணமின்றி வியாபாரம்

பூநகரி, திங்கள்

பூநகரி கிராமசபைக்குக் கீழ் உள்ள சந்தையில் வரிப்பணம் செலுத்தாமலேயே சந்தையில் வியாபாரிகள் வியாபாரஞ்செய்கின்றனராம். கடந்த 4—5 தினங்களாக இந்நிலை ஏற்பட்டுள்ளது. குத்தகைக்காரருக்கும் கிராமசபைக்கும் ஏற்பட்டுள்ள வரி மதிப்புப் பிரச்சினையினாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதெனத் தெரிகிறது.

உடுவில்

சைவசமய நாடகவிழா

யாழ்ப்பாணம், செவ்.

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் சைவ சமய நாடகவிழா இணுவில் இசைநடன கிராமிய கலைக் கல்லூரியின் ஆதரவில் இம்மாதம் 9ம், 10ம், திகதிகளில் உடுவில் கிராமசபைத் திறந்த வெளியரங்கில் நடைபெறவிருக்கின்றது.

ராணி
[யாழ்ப்பாணம்]
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
என் தம்பி

ராஜா
[யாழ்ப்பாணம்]
தினசரி 2-30, 6-30, 9-45
ரவிச்சந்திரன்-பாரதி
நடித்த
தங்கத் தம்பி

MANOHARA
JAFFNA
Daily at
6-30 & 10-00 p.m.
CHANDALEE
(Sinhalese)

68-ம் ஆண்டு பரீட்சைமுடிவுகள் இன்னும் வெளிவரவில்லை

பூநகரி, திங்கள்

ஆசிரியப்பயிற்சி (சாதாரண) 69-ம் ஆண்டு வகுப்புத்தொடங்கிவிட்டபோதிலும் மார்ச் 68-ல் நடைபெற்ற பிரவேசப்பரீட்சை முடிவுகள் இன்னும் வெளிவரவில்லை. ஏராளமான பரீட்சார்த்திகள் இம்முடிவுகள் எப்போது வெளிவருமென ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணமிருக்கின்றனர்.

புதிய மனையியல் பகுதி

பருத்தித்துறை, திங்கள்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஏற்கனவே பல ஆயிரம் ரூபா செலவில் கட்டப்பட்டு இதுவரை உபயோகிக்கப்படாதிருந்த மனையியல் பகுதி விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது. இதற்கான உபகரணங்கள் தருவிக்கப்படவிருப்பதாகவும், தகுதிவாய்ந்த ஓர் ஆசிரியை இதற்குப் பொறுப்பாக நியமிக்கப்படவிருப்பதாகவும் தெரிகிறது.

உதவி அதிபர் ஓய்வுபெறுகிறார்

அனலைதீவு, திங்கள்

அனலைதீவு சதாசிவ ஆங்கில வித்தியாசாலை உதவி அதிபர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை இம்மாதம் 23-ந் திகதிமுதல் தமது சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார். 1931-ம் ஆண்டில் ஆசிரியராக நியமனம் பெற்ற இவருக்கு தற்போது 58 வயது ஆகிறது.

அநுதாபகூட்டம்

பம்பலப்பிட்டி, திங்.

அகில இலங்கை இந்துமா மன்றம் மறைந்த தலைவர் திரு. பொன். ஸ்ரீகந்தராஜாவின் பிரிவு குறித்து அனுதாபக் கூட்டமொன்றை வரும் வியாழக்கிழமை மாலை 5-30 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடத்தவிருக்கிறது.

முல்லைத்தீவு

தலைவர் தெரிவு

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைத்தீவுப் பட்டின சபையின் புதிய தலைவர் தெரிவு இம்மாதம் 12-ந் திகதி முல்லைத்தீவு பட்டின சபை மண்டபத்தில் வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தலைமையில் நடைபெறும்.

நியமனம்

முல்லைத்தீவு, திங்.

முல்லைத்தீவும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜத்தின் நிர்வாகச் சபையதிகாரியாக திரு. நா. பாலேந்திரன் வவுனியா உதவி கூட்டுறவு ஆணையாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தீ விபத்தில்

மேலும் இருவர் மரணம்

சென்னை, ஜன. 6

சிவகாசியில் நடைபெற்ற வெடிமருந்துத் தொழிற்சாலைத் தீ விபத்தில் காயமடைந்து மதுரை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தோரில் மேலும் இருவர் மரணமாகி விட்டனர் என்று இறுதியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன. மொத்தம் இதுவரை 22 பேர் மரணமடைந்துள்ளனர்.

விவசாயிகள் அச்சம்

பண்டத்தரிப்பு, திங்கள்

தொடர்ந்து பெருமழை பெய்யுமானால் உருளைக் கிழங்குச் செய்கையில் அதிக நஷ்டம் ஏற்படுமென இங்குள்ள விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர். கடந்த வருட செய்கையிலும் பார்க்க இவ்வருடத்தில் அதிக அளவில் இப்பகுதியில் உருளைக் கிழங்கு செய்கை பண்ணப் பட்டிருக்கிறது.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

காவியம், நாவல் போட்டி

'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவை யொட்டி 'ஈழநாடு' நடாத்தும் காவியம், நாவல் போட்டிகள் பல எழுத்தாளர்களின் வேண்டுகோளின் பேரில் 15 நாட்கள் வரை பின்போடப்பட்டுள்ளன.

போட்டிக்கு அனுப்பப்படும் காவியம், நாவல் ஆகியன [illegible] 'ஈழநாடு' இதழில் வெளிவரும். இதற்கான கூப்பனுடன் இணைந்து 15-1-69-க்கு முன்னர் அனுப்பவேண்டும். நிபந்தனைகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளன.

'ஈழநாடு' 10-வது ஆண்டு இலக்கியப் போட்டி

முழுப்பெயர்: ______________________

புனைபெயர் ______________________

முகவரி ______________________

____

____

கவிதை/காவியம்/சிறுகதை/நாவல்/ஓரங்க நாடகம்

தலைப்பு ______________________

____
கையொப்பம்

மேற்காஸியா அமைதிக்கு சோவியத் திட்டம்

இஸ்ரேல் நிராகரித்தது

'எல்லைப் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லையாம்'

லண்டன், ஜன. 5

மேற்காசிய அமைதிக்கு சோவியத் யூனியன் தெரிவித்த ஒரு திட்டத்தையும் இஸ்ரேல் நிராகரித்துவிட்டது.

அமைதித் தீர்வு இல்லாமலே, பிடித்த இடங்களை விட்டு விலகும்படி ரஷ்யா தெரிவித்திருப்பதாகவும், அதனால் அதன் யோசனையை ஏற்கமுடியாதென்றும் டெல் அவிவில் நடைபெற்ற மந்திரிசபை கூட்டத்தில் இஸ்ரேல் வெளிநாட்டு அமைச்சர் எபான் அறிவித்துள்ளார்.

மேற்காசிய அமைதிக்குச் சோவியத் யூனியன் தெரிவித்த யோசனைகள் பற்றி உலகத் தலைநகர்கள் எதிலும் விபரமெதுவும் அறிவிக்கப்படவில்லை.

மேற்காசிய நெருக்கடிக்கு அமைதித் தீர்வு இல்லாமலே இஸ்ரேலை வாபஸ்பெறும்படி ரஷ்யா யோசனை கூறியிருப்பதாகவும், இஸ்ரேலின் எல்லைப் பிரதேசப் பாதுகாப்புக்கும், சர்வதேசக் கடல் பிராந்தியத்துக்கும் உத்தரவாதம் எதுவும் தெரிவிக்கப்படவில்லையென்றும் கூறி, இஸ்ரேல் ரஷ்யாவின் யோசனை ஏற்றுக்கொள்ளக்கூடியதாய் இல்லையென நிராகரித்துவிட்டது.

மீண்டும் பெரிய சண்டை ஆரம்பமாகலாம்

ஜோர்டான்மன்னர்எச்சரிக்கை

மேற்காசியாவில் மீண்டும் பெரிய சண்டை ஆரம்பமாகக்கூடிய அபாயமேற்பட்டிருப்பதாக ஜோர்டான் மன்னர் ஹுசேன் லண்டனில் கூறினார்.

சிகிச்சைக்காக லண்டனுக்கு வந்துள்ள மன்னர், மேற்காசியா குறித்து நான்கு வல்லரசுகளும் ஏதாவது கூட்டு முயற்சியில் இறங்கவேண்டும். இல்லையென்றால் அங்கு மீண்டும் பெரிய சண்டை ஆரம்பமாகக்கூடிய அபாயமிருக்கின்றது என்றார்

லண்டனுக்கு வரும் வழியில் மன்னர் ஹுசேன் பெரூட்டில் இறங்கி, லெபனான் பிரதமருடன் பேச்சுக்கள் நடத்திவிட்டுவந்தார். அரபுத் தலைவர்களின் மகாநாடு நடத்தப்படவேண்டுமென்று தாம் தெரிவித்த யோசனையை லெபனான் பிரதமரும், ஐக்கிய அரபுக் குடியரசும் வரவேற்பதாக அவர் கூறினார்.

லெபனான் மேலும் சில தீவிரமான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. லெபனான் எல்லையில் இஸ்ரேலின் பூசல் இருந்துவருவதால் எந்த அவசர நிலைமையையும் சமாளிக்கத் தம் கைகளைத் தயார்செய்யும் வகையில் கிராமவாசிகளுக்கு லெபனான் ஆயுதங்களை வழங்கத் தொடங்கியுள்ளது.

பாரிஸ் பேச்சு

அமெரிக்காவின் புதிய தலைமைப் பிரதிநிதி

நியுயோர்க், ஜன. 5

பாரிஸில் நடைபெறும் வியட்நாம் அமைதிப் பேச்சுகளில் அமெரிக்காவின் பிரதிநிதிகள் குழுவுக்குத் தலைமை வகிக்கத் தற்பொழுது மேற்கு ஜெர்மனியில் அமெரிக்கத் தூதுவராக இருக்கும் திரு. ஹென்றி கபொட் லொட்ஜ் நியமிக்கப்படுவார்.

தற்பொழுது பாரிஸில் அமெரிக்கத் தலைமைப் பிரதிநிதியாகவிருக்கும் திரு. அவரெல் ஹரிமன் ஜனாதிபதி ஜோன்ஸன் பதவியிலிருந்து விலகும்போது தாமும் விலகிக்கொள்வார். அந்த இடத்தில் கடமையாற்றுவதற்கு திரு. கபொட்லொட்ஜை புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள திரு. நிக்ஸன் நியமித்துள்ளார்.

திரு கபொட்லொட்ஜ் முன்னர் இரு தடவைகள் தென்வியட்நாமில் அமெரிக்கத் தூதராக இருந்துள்ளார்.

ஸ்மிர்கோவ்ஸ்கி கருத்து

கம்யூனிஸ்ட் மத்திய பீட முடிவை ஏற்பேன்

பிராக், ஜன. 6

செக்கோஸ்லவேக்கியா சமஷ்டிசபைத்தலைவர் தெரிவு பற்றிய பிரச்னை சம்பந்தமாக திரு. ஸ்மிர்கோவ்ஸ்கி டெலிவிஷனில் நேற்றுத் தமது கருத்துக்களைத் தெரிவித்துக்கொண்டார். சமஷ்டிசபைத் தலைவர் தெரிவு பற்றி வீணான சர்ச்சைகளை கிளப்பவேண்டாமென்றும், நாடு புதிய திருப்பத்தில் போய்க்கொண்டிருக்கும் இவ்வேளையில் கலகங்களுக்கும், குழப்பங்களுக்கும் இடம்கொடுக்கவேண்டாமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தம்மைத் தெரிவு செய்ய தொழிலாளர் உருவாக்கும் இரைச்சலை அவர் கண்டித்தார். தமக்குச் சாதகமாக தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்யவிருப்பது பற்றி அவர் கூறுகையில், அது வீண் பிரச்னைகளை ஏற்படுத்தும் என்றும் கட்சித்தலைமைப் பீடம் கூறுவதை தாம் ஏற்றுக்கொள்ளுவதாகவும் அவர் தெரிவித்தார்.

31 ஜப்பானியர் மூழ்கி மரணம்

டோக்கியோ, ஜன.6

ஜப்பானிய கப்பல் ஒன்று நடுக்கடலில் மூழ்கிப்போனதில் அதிலிருந்த 83 பேரில் 31 பேர் மூழ்கி மரணமாகியிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

சைகோன் மந்திரி படுகாயம்

சைகோன், ஜன.6

தென்வியட்நாம் கல்வி அமைச்சர் நேற்றுநடைபெற்ற எறிகுண்டுவிபத்தில் படுகாயமடைந்தார். இதுசம்பந்தமாக மேலும் பலர் காயமடைந்துள்ளதாகவும் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன. இவ்விபத்திற்கு தென்வியட்நாமிலுள்ள புரட்சிக்காரரே காரணமாக இருக்கக்கூடுமென்று கருதப்படுகின்றது. இவர்கள் போகையில் எறிகுண்டு வீசப்பட்டதாம்.

பகவான் சாயிபாபா வருகிறார்

யாழ்ப்பாணம், செவ்.

பகவான் சத்ய சாயிபாபாவின் யாழ்ப்பாண விஜயத்திற்கானதற்காலிக நிகழ்ச்சிநிரல் ஒன்று இப்போது தயாரிக்கப்பட்டுவருகின்றது.

இம்மாதக் கடைசியில் அல்லது அடுத்த மாத முற்பகுதியில் இவர் யாழ்ப்பாணம் வரலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

பகவான் சத்திய சாயிபாபா மன்னார், மட்டக்களப்பு, திருமலை, வவுனியா ஆகிய இடங்களுக்கும், இவ்விஜயத்தின்போது செல்ல ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. [கா. நி]

வல்லரசு

கூட்டுமுயற்சிக்கு இந்திரா வரவேற்பு

லண்டன், ஜன

காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி லண்டன் வந்து சேர்ந்துள்ளார். இலங்கைப் பிரதமர் உட்பட பலரும் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்து சேர்ந்துகொண்டிருக்கிறார்கள். லண்டன் செல்லும் வழியில் திருமதி இந்திரா மாஸ்கோவில் ரஷ்ய துணைப்பிரதமரைச் சந்தித்து சிலமணிநேரம் பேச்சுவார்த்தைகள் நடாத்தினார்.

லண்டனில் பத்திரிகைநிருபர்களுக்கிடையே பேசிய இந்திரா 'எதிர்காலத்தைப் பற்றித் தீர்க்கமாகக் குறிப்பிடமுடியாவிட்டாலும் காமன்வெல்த்திலிருந்து விலகும் எண்ணம் தற்போது இந்தியாவுக்கு இல்லை' எனக் குறிப்பிட்டார்.

மேற்காசிய நிலைமைபற்றி அவர் குறிப்பிடுகையில் வல்லரசுகளின் கூட்டுமுயற்சி அவசியமென்றும், நிரந்தரமான தீர்வு காண்பதற்கு அம்முயற்சி மேற்கொள்ளப்படவேண்டுமென்று இந்தியா எதிர்பார்ப்பதாகவும் சொன்னார்.

அமைதி வெறும் பேச்சில் மட்டுமில்லை. அதற்கு பலநாடுகளும் பொறுப்பாக இருக்கமுடியும். இஸ்ரேலும் ஒரு நாடுதான். ஆனால், தன் எல்லையைமீறிச் சென்று மற்றைய நாடுகளைக் கைப்பற்றுவதை யாரும் விரும்பமுடியாது என்று மேலும் அவர் தெரிவித்தார்.

ஈரானில் 500 பேர் பலி

தெஹ்ரான், ஜன 6

கடந்த சனிக்கிழமை ஈரானில் ஏற்பட்ட கடும் பூகம்பத்தில் குறைந்தது 500 பேராவது கொல்லப்பட்டிருப்பார்கள் என்றும் 300க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்திருப்பார்கள் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. 2,000க்கு மேற்பட்டவர்கள் வீடுகளையும் உடமைகளையும் இழந்து நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

ஈரானில் ஏற்பட்டுள்ள கடும் குளிரால் பலர் மரணமாகியுள்ளனர் ராணுவத்தினரும் மீட்பு கோஷ்டிகளும் பாதிக்கப்பட்ட இடங்களில் உதவிகள் புரிவதில் ஈடுபட்டுள்ளனர் பலமான காற்றின் காரணமாக சுமார் 800 வீடுகள் நாசமாகியுள்ளன.

கலைவிழா

(அளவெட்டி, நிருபர்

யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரியின் கலைவிழா ஒன்றை இம்மாதம் 13-ம் திகதி யாழ்நகரில் நடத்தவிருக்கிறது.

யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரியின் நாட்டிய மன்றத்தின் ஆதரவில் திருநெல்வேலி தெற்கு பாலிய முன்னணியினர் பரமேஸ்வராக் கல்லூரி வடக்கு வீதியில் அமைக்கப்படும் 'கலைவாணி' அரங்கில் இக்கலைவிழாவை நடத்த ஒழுங்குகள் செய்துள்ளனர்.

இவ்விழாவை யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. த. முருகேசம்பிள்ளை ஆரம்பித்துவைப்பார்.

[illegible] திரு. பி. கா பொ. இரத்தினம், கலையரசு சொர்ணலிங்கம் திரு. வி. பொன்னம்பலம் ஆகியோர் விழாவில் கலந்து கொள்வார்கள்.

யாழ் சரவணபவா நாடக மன்றத்தினரின் நாடகமும், வேறு கலை நிகழ்ச்சிகளும் இவ்விழாவில் இடம்பெறும்.

பாணந்துறை

உள்நாட்டமைச்சு கோரிக்கை

கோப்பாய், நிருபர்

இந்த ஆண்டில் வடபகுதியில் திறக்கப்படவிருக்கும் பனஞ் சாராயத் தொழிற்சாலைக்கு வேண்டிய விபரங்கள் யாவற்றையும் கிராமங்கள் தோறும் திரட்டித் தருமாறு ஒவ்வொரு கிராம சேவையாளர்களையும் உள்நாட்டமைச்சு கோரியுள்ளது.

அதிகாரியைத் தாக்கினாராம்

முல்லைத்தீவு, நிருபர்

முல்லைத்தீவு சிறைக்கூடத்தைச் சேர்ந்த ஊழியர் ஒருவர் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். முல்லைத்தீவு சிறைக்கூடத்தில் வழிப்பாதுகாவலராக கடமை செய்த இவர் அதேசிறைக்கூடப் பொறுப்பதிகாரியைத் தாக்கியதாகவும், கடமையிலிருந்து தவறியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணையின் பின் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பாப்பாண்டவருக்கு ஆதரவாக காந்திஜியின் கருத்துக்கள்

போலிஷ்கருதினல் மேற்கோள்காட்டினார்

வத்திக்கான், ஜன 6

குடும்பக்கட்டுப்பாடு சம்பந்தமாக பாப்பாண்டவர் தெரிவித்துள்ள கருத்துக்களுக்கு சாதகமாக போலிஷ் கர்தினல் ஒருவர் மகாத்மா காந்தியின் கருத்திலிருந்து மேற்கோள்களை எடுத்து விளக்கியுள்ளார்.

பத்திரிகையொன்றில் கர்தினல் கரோல் வொஜ்டைலா எழுதியுள்ள கட்டுரையொன்றில் "சரீ [illegible] பிடுவது, தூண்டுவதுபோன்று உடல் தொடர்புகள் இயற்கையான செயல் என்பது அறியாமை" என்று மகாத்மா காந்தி கூறியிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்

மகாத்மாவின் வாழ்க்கையின் குறிப்பிலிருந்து மேற்கோள் காட்டுகையில் குடும்பக்கட்டுப்பாடு மனவலிமையினாலும் சுயகட்டுப்பாட்டின் மூலமும் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற கருத்தை காந்திஜி வற்புறுத்தியுள்ளார்.

கிறிஸ்தவரல்லாத இந்தத் தலைவரின் கருத்துக்கள் பாப்பாண்டவரின் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய கருத்தின் சாசுவதமான உண்மையையும் நோக்கத்தையும் மக்களுக்கு உணர்த்துவதாக கூடும் என்று கர்தினல் வொஜ்டைலா தெரிவித்துள்ளார்.

மணிவாக்கு

நாம் எந்த அளவுக்கு குற்றமற்று இருக்கின்றோமோ, அந்த அளவுக்கு வலிமைபெறுவோம். அந்த அளவுக்கு வெற்றியும் பெறுவோம்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

Eelanadu National Tamli Daily
Telegram "EELANADU" Jaffna.
Post Box. 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் கீலக வருஷம் மார்கழி மாதம் 24-ந்திகதி
[7-1-69]

ஆசிரியர் பிரச்னை

அரசாங்க சேவை ஆணைக்குழு, உள்ளூராட்சி சேவை ஆணைக்குழு போன்று ஆசிரிய சேவை ஆணைக்குழு ஒன்றை அமைக்கவேண்டுமென்றும் ஆசிரியர்களின் நிலைமை சீராக்குதற்கு அதிகாரம் [illegible] அரசாங்கம் கூடுமானவரை அமுல் செய்ய வேண்டுமென்றும் உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. எம். சிவசிதம்பரம் ஆட்சிமன்றத்தில் சமீபத்தில் எடுத்துக் கூறியிருக்கிறார். ஆசிரியர்களின் இன்றைய நிலை அவர்களின் குறைகள் அவற்றை நீக்கவேண்டியதன் அவசியம் ஆகியவற்றை உடுப்பிட்டிப் பிரதிநிதி ஆட்சிமன்றத்தில் தெளிவாக தெரிவித்திருப்பது இந்த அரசாங்கம் மட்டுமல்ல எந்தக்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆட்சி பீடத்துக்கு வந்தாலும் ஆசிரியர் விஷயத்தில் கவனம் செலுத்தி திருப்தி நிறைந்த ஒரு சமுதாயத்தை உருவாக்க உதவ வேண்டும்.

1966ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 'யுனெஸ்கோ' அகிலத்துலக தொழிலாளர் நிறுவனம் ஆகியவற்றின் ஆதரவில் நடைபெற்ற அரசியல் தூதுவர்கள் மகாநாட்டில் ஆசிரியர்களது நிலைசம்பந்தமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் தகுதியுடையன என்று ஏற்று அவற்றை அமுல்நடத்தக் கோரும் பிரேரணையொன்றை உடுப்பிட்டிப் பிரதிநிதி கொண்டுவந்திருந்தார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடந்த இந்த மகாநாட்டில் செய்யப்பட்ட சிபாரிசுகள் இப்போது பழசாகிவிட்டதாகவும் இலங்கையில் கல்வித்துறையில் பலமாறுதல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் இப்பிரேரணை சம்பந்தமாகப் பேசுகையில் குறிப்பிட்டிருப்பது இப்பிரேரணையையே தட்டிக்கழிப்பதாகவே இருக்கிறது. அமைச்சர் குறிப்பிடுவதுபோல் நமதுநாட்டில் கல்வித்துறையில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருப்பது உண்மையே. அமைச்சரும், கல்வி அமைச்சும் அதுமேற்கொண்ட பல நடவடிக்கைகளும் இக்கல்வியில் குழப்பத்தையும் ஏற்படுத்தி கல்வியையே குழப்பி வைத்திருக்கிறது. பாடத்திட்டத்தில் குழப்பம், பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளைச் சேர்ப்பதில் குழப்பம், பரீட்சையில் குழப்பம், ஆசிரியர் நியமனம், இடமாற்றத்தில் குழப்பம் - இப்படி கல்வித்துறையிலே குழப்பமே நிறைந்திருக்கிறது.

இந்தக் குழப்பங்களை நீக்கவும் ஆண்டுக்கொரு தடவை ஆசிரிய இடமாற்றத்தினால் பாடசாலைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கஷ்டமும் [illegible]யும் ஏற்படுவதைத் தடுக்கவும் தேசிய மொழி ஆசிரியர்களுக்கும் ஆங்கில ஆசிரியர்களுக்குமிடையில் இன்றும் நிலவும் சம்பள முரண்பாட்டை நீக்கவும் ஆசிரிய சேவைக் கமிஷன் ஒன்றை நிறுவுவது சிறந்த பலனுள்ள யோசனையாகும். ஆசிரிய சேவைக்கமிஷன் நியமிக்க வேண்டுமென்று ஆசிரிய சங்கங்கள் பல ஏற்கெனவே கோரியிருக்கின்றன.

நாட்டின் நற்பிரஜைகளை உருவாக்கும் பெரும்பொறுப்புள்ள ஆசிரியர், திருப்தியுடன் வாழவேண்டும். திருப்தியற்ற ஆசிரியர்கள் நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியாது. எனவேதான் உடுப்பிட்டிப்பிரதிநிதி கூறியது போல கல்வி அரசியலுக்கு அப்பாற்பட்டதாகக் கருதி ஆசிரியர்களின் குறைகளை நீக்குவதற்கு அவர்களின் பிரச்னைகளைத் தேசியப் பிரச்னையாகக் கருதி சகல அரசியல் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து வழிகாண முன்வரவேண்டியது அவசியம்.

இறந்த குழந்தை அழுதது

[illegible], ஜன 6

திடீர்க்கவிகை காரணமாக இறந்த நான்கு மாதக் குழந்தையொன்று புதைக்கப்போகும் தருணத்தில் உயிர் பெற்ற அதிசய சம்பவம் [illegible] இருந்து 80 மைல்களுக்கப்பால் உள்ள [illegible] ஜாப்தாரத்தில் நடைபெற்றது. தாம் புதைகுழிக்கு எடுத்துச் சென்ற பெற்றோர் குழந்தை அழுதவுடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்கள். குழந்தை நல்ல நிலையில் உள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

பண்டத்தரிப்பு கி.ச.
தலைவர் தெரிவு 15ல்
இடைத்தேர்தல் 13 ல்

நல்லூர், திங்கள்

பண்டத்தரிப்பு கிராம சபை 4ம் வட்டார இடைத் தேர்தலுக்கான வேட்புமனு பத்திரங்கள் இம்மாதம் 13ம் திகதி தாக்கல் செய்யப்படவிருக்கின்றன. இக்கிராம சபைத் தேர்தல் அண்மையில் நடைபெற்று முடிந்ததும் 4ம் வட்டார அபேட்சகர் மரணமானதால் இவ்வட்டாரத் தேர்தல் பிற்போடப்பட்டதும் தெரிந்ததே.

16 அங்கத்தவர்களைக் கொண்ட இக்கிராமசபைக்கான தலைவர் தெரிவு இம்மாதம் 15ம் திகதி ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி நடக்குமென்றும் 4ம் வட்டாரத் தேர்தல் முடிவு எதிர்பார்க்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

"ஹார்பர் தொழிலாளர்களைப் ஆசிரியர்களும் கச்சைகட்டுகிற

மத்தியமந்திரிக்கு தமிழ்நாடு மாணவர் எச்சரிக்கை

சென்னை, ஜன. 6

எமது உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்காமல் மத்திய அரசு யதேச்சாதிகாரம் பேசுமிக்கே தமிழகத்தில் இந்திப் பள்ளிக்கூடங்களைத் திறந்தால் இம்மாதம் 26ம் திகதி தொடக்கம் போராட்டத்தில் இறங்குவோம்.

இவ்வாறு மதுரைக் கல்லூரி, மதுரை தியாகராஜ கல்லூரி மாணவர்கள் எச்சரிக்கிறார்கள். மத்திய அரசின் கல்வியமைச்சுத் துணைமந்திரி திரு. ஷேர்சிங் மதுரைக்கு வந்தபோதே மாணவர்கள் இவ்வாறு கூறினர்.

இதற்குப் பதிலளித்த துணைமந்திரி அவை இந்திப் பள்ளிகள் அல்ல என்றும் தக்ஷிண இந்தி பிரசாரசபை அமைப்புகள் இந்தி நிலையங்கள் என்றும் அம்முறையில் கடந்த 50 ஆண்டுகளாக காந்திஜியினால் தொடக்கி வைக்கப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து இயங்கிவருவதாகவும் குறிப்பிட்டார்.

கல்விமந்திரி அங்

"ஹார்பர் வேலைக்காரர்களைப்போல சம்பளத்தைக் கூட்டாவிட்டால் வேலைநிறுத்தம் செய்கிறோம் என்று ஆசிரியர்கள் அதுவும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சொல்கிறார்கள். அடக்கவுளே இந்த ரீதியில் எப்படித்தான் உருப்படப்போகிறதோ" என்று [illegible] நேற்று ஆட்சிமன்றத்திலே அங்கலாய்த்துக் கொண்டார் கல்வி அமைச்சர் ஐ. எம். ஆர். ஏ. ஈரியகொல்லை.

தடுத்து தடங்கலின்றி மடை உடைத்த வெள்ளம் போல் அவர் வாயிலிருந்து வெளிவந்த இக்கனச் சொற்றொடரினூடாக இழையோடிய நகைச்சுவையையும் ஞானத்தையும் ஆட்சிமன்றத்திலமர்ந்திருந்த ஆளுங்கட்சி உறுப்பினர்கள் வெகுவாக ரசித்தனர் என்பதை அவர்களின் மலர்ந்த முகங்கள் பறைசாற்றின.

ஆசிரியர்களைப்பற்றி இப்படி பொதுப்படையாகக் குறைகூறுவதோடு நிற்கவில்லை கல்விமந்திரி. யுனெஸ்கோ சிபாரிசு செய்ததென்ன — ஐரோப்பியர்கள் சிபாரிசு செய்ததென்ன அவர்கள் செய்துள்ள சிபாரிசுகளை விட பன்மடங்கு அதிகமாகவே நாம் நமது ஆசிரியர்களுக்கு செய்திருக்கிறோமென்றும் உலகத்திலேயே மிகச் சிறந்த கண்ணியமான கௌரவமான ஆசிரியர்கள் நமது டில்தான் இருக்கி என்று சொன்னார்.

நேற்று ஆட்சிமன் உடுப்பிட்டி எம். பி. எம். சிவசிதம்பரம் செப்டம்பர் மா யுனெஸ்கோ அகி தொழிலாளர் நி ஆதரவுடன் ஆ நடைபெற்ற அரசி வர்கள் மகாநாட்டி யர்களது நிலை சம்பந் ஏற்றுக்கொள்ளப்பட்ட ரிசுகளை அரசாங்கமு றுக்கொள்ளவேண்டு கோரும் தனிநபர் பிரே ணையொன்று விவாத எடுத்துக்கொள்ளப் போது தான் அமைச்சர் மே டவாறு கூறினார்.

(நமது சபை நிரு

பிரேரணைகளைக் கொ வந்துபேசிய உடுப் னா முன்று முக்கி க்கைகளை அமைச்சரி வத்திற்குக் கொ தார்.

முதலாவதாக மொழிகளில் கற்பி ஆசிரியர்களுக்கும் ஆ திலக் கற்பிக்கும் ஆ களுக்கும் இடையில் வதில் வித்தியாசம் க்கூடாது. எம்மொ கற்பித்தாலும் ஒரே எப்தான் வழங்க வேண்டும்.

உலகம் முழுவதும் கொண்டாடும் பிரஜை

காந்திஜி பற்றி சர்வோதயத் தலைவர

நுவரேலியா, ஞாயிறு

மகாத்மாகாந்தி ஒரு இந்தியராகப் பிறந்தபொழுதும் இன்று அவர் உலகம் முழுவதற்கும் உரிய பிரஜையாகக் கொண்டாடப்படுகின்றார். சமீப கால சரித்திரத்தில் இவரைப்போன்று உலக மக்களிடையே செல்வாக்குப் பெற்ற ஒருவர் இல்லையெனலாம். இதனாலேயே உலகிலுள்ள ஒவ்வொரு நாடும் காந்தி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறது".

இவ்வாறு இந்திய சர்வோதய இயக்கத் தலைவர் திரு. ஜயப்பிரகாஷ் நாராயண் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸினால் நுவரேலியா நகரமண்டபத்தில் கொண்டாடப்பட்ட காந்தி நூற்றாண்டுவிழாவில் பேசுகையில் கூறினார்.

விழாவுக்குமுன்னர் தோட்டத் தொழிலாளர்களும் வியாபாரிகளும் திரு. ஏ. அஸீஸ் தலைமையிலான பிரமாண்டமான ஊர்வலத்தில் கலந்துகொண்டும் வழிநெடுக சர்வோதய தலைவருக்கு மலர்மாலைகள் சூட்டியும் அமோக வரவேற்பு அளித்தார்கள்.

சர்வோதயத் தலைவர் தொடர்ந்து பேசுகையில் மகாத்மா காந்தியின் போதனைகளில் ஒன்றான மது ஒழிப்பு பற்றித் தோட்டத் தொழிலாளருக்கு எடுத்துக் கூறினார். போதையைக் கொடுக்கும் மது மனிதனைக் கெடுத்து அவனின் ஆத்மீகவாழ்வையும் குடும்பவாழ்வையும் ஒருங்கே சீர்குலையச் செய்யும் என்றார்.

மலை தோட்டத்தொழிலாளர்கள் திரு. ஜெயபிரகாஷ் நாராயணனின் முன்னிலையில் போதைதரும் மதுவைத் தாங்கள் பாவிப்பதில்லையென சத்தியம் செய்தனர்.

மாலை அக்கரபத்தனையில் நடைபெற்ற கூட்டத்திலும் சர்வோதயத்தலைவர் சொற்பொழிவாற்றினார்.

வரவு செலவு திட்டம் நிறைவேறியது

5-1-69 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்திருந்த 'இரு பட்டினசபைகளும் கலைக்கப்படுமா?' என்ற செய்தி சம்பந்தமாக சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. க. கனகரத்தினம் பின்வருமாறு எழுதுகிறார்.

நகரசபைக்கூட்டம் நடைபெற்றபோது வரவு—செலவுத்திட்டத்தை ஆதரித்து 4 பேரும், எதிர்த்து 7 பேரும் வாக்களித்தனர் என்பது தவறு. 1969-ம் ஆண்டு மார்கழிமாதம் 30-ந் திகதி காலை 10 மணிக்கு சாவகச்சேரி நகரசபையின் விசேஷ கூட்டம் தலைவர் திரு. க. கனகரத்தினம் அவர்களின் தலைமையில் நடைபெற்றபோது 1969-ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் ஏகமன [illegible]



நெற் பீடை
கும் ஓவ்வொ
கள் சிபார்
நாக்கும் எ
மாக அறவே
காசினி
மருந்தே'
பாவற்றை
வருடம் வெ
காசினியோ
மீண்டும்
களிலும்
நெல் விளை
வாறு நிரூபி

'என்றெக்
செய்ய இ
களிலும் 1

பெற்றோர்-ஆசிரியர் சங்க கோரிக்கை

கோப்பாய், திங்கள்

கோப்பாய் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் இரும் வகுப்புக்குரிய உயர்தர விஞ்ஞான பாடங்களைக் கற்பித்தற்குரிய ஆசிரியர்கள் இல்லாமையால் இப் பாடசாலை மாணவர் வேறு பாடசாலைகளுக்கு மாறிச்செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இப் பாடசாலைகளுக்கு [illegible]ரான கணித விஞ்ஞான ஆசிரியர்களை உடன் நியமிக்கவும்".

மேற்கண்ட தீர்மானம் கோப்பாய் றோமன் கத்தோலிக்கப் பாடசாலைப் பெற்றோர் ஆசிரிய சங்கத்தாரால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு வடமாநிலக் கல்வி அதிகாரிக்கும், வட்டாரவித்தியாதரிசிக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தமிழரசு மாநாடு

யாழ்ப்பாணம் தமிழரசுக் கட்சியி டாந்தமகாநாடு தொகுதியில் ஏப்ரல் திகதிகளில்நடை பெ கழி நிர்வாக சபை டத்தில் தீர்மானி டது. உடுவில் ஆ அங்கத்தவர் வர குழுத்தலைவராகத் செய்யப்பட்டார்.

ாப் போல கிருர்களே'' அங்கலாய்க்கிருர்

நமது நாட்
இருக்கிருர்கள்
ருர்.
ளுமன்றத்தில்
எம். பி. திரு
மாரம் ''1966
மாதத்தில்
அனைத்தையும்
நிறுவனம்
ஆதரவில்
அரசிடமிருந்து
ரமிடுக. ஆசிரி
சம்பந்தமாய்
எப்படியா
சாங்கமும் ஏற்
வேண்டுமெனக்
பிரேரணை
விவாதத்திற்கு
எனப் பட்ட
ளுமன்றமொழு
ச்சர் மேற்கண்
ர்.

(பை நிருபர்)

கொண்டு
உடுப்பிட்டி
முக்கிய பிர
மைச்சரின் கவ
வேண்டுவத்

தேசிய
கற்பிக்கும்
கும் ஆங்கில
ம் ஆசிரியர்
டையில் சம
ாசம் இருக்
எம்மொழியில்
ஒரே சம
வழங்கப்பட

இரண்டாவதாக அரசாங்க ஊழியர்களின் இடமாற்றம், நியமனம், பதவி உயர்வு ஒழுங்கு நடவடிக்கை ஆகியவற்றைக் கவனிக்க அரசாங்க சேவைக் கமிஷன் இருப்பதுபோல ஸ்தலஸ்தாபன அமைப்புத் தொழிலாளருக்கு ஸ்தலஸ்தாபனக்கமிஷன் இருப்பதைப் போல ஆசிரியர்களின் இடமாற்றம், பதவி உயர்வு, ஒழுங்கு நடவடிக்கை ஆகியவற்றைக் கவனிக்க தனி ஒரு கமிஷன் அமைப்பு உருவாக்கப்படவேண்டும்.

மூன்ருவதாக ஏனைய தொழில்சம்பந்தப்பட்டவற்றில் அவ்வத் தொழிற் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதைப் போலவே, ஆசிரியர்களின் தொழிற் சங்கங்களையும் அமைச்சர் அங்கீகரித்து, அவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்னைகளைப்பற்றி அத் தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டும்;

இந்த மூன்று முக்கியமான அம்சங்களை ஆணித்தரமாக வலியுறுத்திய திரு சிவசிதம்பரம், ஆசிரியர்களின் நிலையை உயர்த்த - அவர்களைக் கௌரவிக்க தக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

சாதாரணமாக தமிழ்ப் பகுதி உறுப்பினர்களின் பேச்சை பாராளுமன்றத்திலே அடிக்கடி வேலிகாரம் கொடுத்துவைத்தவர்களல்ல. இருந்திருந்து யாராவது தப்பித் தவறிபேசினுல்தான் உண்டு! இந்தச் சூழ்நிலையில் ஊர்காவற்றுறை எம்பி திரு வி நவரத்தினம் பிரேரணையை ஆமோதித்துப் பேசியதைச் சபை மகிழ்ச்சியாகக் [illegible]!

ஊர்காவற்றுறை எம் பி 'முன்பின் யோசியாதமுறையில் திட்டமிடப்படாத இடமாற்றங்களால் எத்தனையோ குடும்பங்கள் பிளவுபடுவதைச்சுட்டு பெரிதும் கவலைப்பட்டுக்கொண்டார்.

இவரைத் தொடர்ந்து மாத்தறை எம் பி துடாவவும், உடுப்பிட்டி எம் பி யின் பிரேரணையை ஆதரித்துப் பேசியபின் பதிலளித்த கல்வி அமைச்சர் "இதென்ன பிரேரணை? 1966-ம் ஆண்டு செய்யப்பட்ட இடமாற்றங்களை அமுல் நடத்தும்படி 1968ல் கேட்கிருர்கள். இதிலிருந்து நோக்கும் முன்னேறிய நாடுகளில்கூட இல்லாத பல சீர்திருத்தங்களை நாம் ஏற்படுத்தியே செய்துவிட்டோமே உலகத்திலேயே எந்தப் பகுதியிலும் ஆசிரியர்கள் அனுபவிக்காத வசதிகளையெல்லாம் நாம் கொடுத்திருக்கிருேம்' என்ற தொனியில் ஆரம்பித்து ஆசிரியர்களின் தொழிற்சங்கங்களைப்பற்றிச் சாடு சாடு என்று சாடித் தள்ளினுர்.

"எந்தக் கட்சி ஆட்சியிலிருந்தாலும், அந்தக்கட்சியின் கொள்கைப்படி, கல்வித் திட்டத்தின்படி போதிக்க வேண்டியதுதான் ஆசிரியர்களின் கடமை. ஆனுல் சில ஆசிரியர்கள் அப்படிச்செய்யாது அரசாங்கத்தை— தேசிய அரசாங்கத்தைக் குறை கூறிக்கொண்டு இருவதை எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும்' என்று கேட்டுவிட்டு, '[illegible] தூக்கிக்கொண்டு [illegible] தனமாகக் கூச்சலோட்டவர்கள் — சதிபுரிந்தவர்கள் எல்லாரும் இப்பொழுது ஆசிரியத் தொழிலிலில்லை! அவர்களெல்லாம் 1966 ஜனவரி 8-க்குப்பின் பிரட்டி விட்டோம்?' என்று பெருமைப்பட்டுக்கொண்டார்.

அரசாங்க ஊழியர்களிலேயே குறைந்த சம்பளத்துக்குப் போதிய வேலைசெய்கிறவர்கள் ஆசிரியர்கள் மட்டும்தான் என்று அமைச்சர் கூறியதை நாடெங்கும் உள்ள ஆசிரியர்கள் கேட்பின் மனமகிழ்ச்சி அடையாமலிருப்பார்கள் என்று சொல்ல முடியுமா!

தனிஉறுப்பினர் நாளன்று வழக்கமாக எது நடக்கும் என்று பொதுவாக மக்கள் நினைப்பார்களோ எதிர்பார்த்திருந்தார்களோ அதுதான் நேற்றும் நடந்தது! ஆமாம் கோரம் இல்லாத [illegible]ரம்தான்! உடுப்பிட்டி எம் பி.யின் பிரேரணை நிறைவேற்றப்பட்டபின் இனி தொடர்ந்து [illegible] எம். பி, கா. பொ. இரத்தினம் தனது பிரேரணையைப் பிரேரிக்க எழுந்தபோது அமைச்சர் திரு. மொண்டேகு ஜயவிக்ரம கோரம் இல்லாததைச்சுட்டிக்காட்டினுர். கோரத்திற்கான மணியடித்தும் போதிய உறுப்பினர்கள் வந்து சேராததால் சபை ஒத்திவைக்கப்பட்டது.

பாடசாலைகளிலுள்ள புதிய பிரச்னை

ஆசிரியர் இடமாற்றம்; அதிபருக்கு தடுமாற்றம்

பருத்தித்துறை, டிச. வடமராட்சிப் பகுதியிலுள்ள பாடசாலைகளில் இட நெருக்கடியைவிட வேறு புதிய பிரச்னைகளும் தோன்றியுள்ளனவாம். தங்கள் குழந்தைகளை விஞ்ஞானப் பகுதியில் விடுமாறு கோரும் பெற்றோர்கள் உபத்திரவத்துடன் திடீர் உள்ளூர் இடமாற்றங்கள் காரணமாக வாரத்துக்கொரு நேரசூசி தயாரிக்கவேண்டிய நிர்ப்பந்தமும் அதிபர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

சிலபாடசாலைகளுக்குப் பாடவிதானமோ பாடப் புத்தகங்களோ கல்விப்பகுதியால் இதுவரை கொடுக்கப்படாமையால் சில வகுப்புகளில் சில பாடங்கள் போதிக்கப்பட முடியாத நிலைமையும் உருவாகியுள்ளது. பாடப் புத்தகங்கள், பயிற்சிக் கொப்பிகள்மீது அரசாங்கம் விதித்திருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதன் விளைவாக இவற்றின் விலைகளும் அதிகரித்துள்ளன. இவற்றை விட சில பாடசாலைகளில் ஆசிரியர் பற்ருக் குறை காரணமாக ஜனவரி 28ல் பரீட்சை எடுக்கவிருக்கும் க. பொ. த. (சாதாரண) வகுப்பு மாணவருக்குக்கல்விபோதிக்க முடியாமலும் இருப்பதாகத் தெரிகிறது.

பாடசாலைகளில்

ஆங்கிலத் தகைமையை அதிகரிக்க முயற்சி

கொழும்பு, டிசம். ''1940-ம் ஆண்டு இலங்கையிலிருந்த ஆங்கிலக் கல்வித் தகைமையை மீண்டும் ஏற்படுத்திவிட முடியும் என்றும் கல்விஅதிகாரிகள் கல்வியமைச்சர் திரு ஐ. எம். ஆர். ஏ. ஈரியகொல்லைக்கு ஓர் உறுதிமொழி அளித்திருக்கிருர்கள்.

இதற்காக நாடெங்கிலுமிருந்து ஆங்கிலமொழித் தேர்ச்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவாராம். இத்திட்டத்தின்படி 12000 ஆங்கில ஆசிரியர்களுக்கு மேல் உருவாக்க முடியுமெனவும் மாணவர் விருப்பமாகக் கற்கக்கூடிய வகையில் புதிய முறைகள் கற்பித்தலில் கைக்கொள்ளப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் கருத்து கோரப்படுகிறது

திருக்கோணமலை, டிசம். திருக்கோணமலை அபிவிருத்தித் திட்டம் சம்பந்தமாக விசாரணை நடாத்தப் பிரதமரினுல் நியமிக்கப்பட்ட குழு, பொதுமக்களுடைய அபிப்பிராயங்களைக் கோரியிருக்கிறது. இக்குழுவுடன் தொடர்புகொள்வோர் பெப்ரவரி 15ந் திகதிக்குள் தமது கருத்துக்களை இக்குழுவுக்கு அனுப்பி வைக்கவேண்டுமெனப் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்தவரும் இக்குழுவின் காரியதரிசியுமான எம் எம். எம் மரைக்கார் தெரிவித்திருக்கிருர்.

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

வேண்டும் சைவமக்கள் உண்மைச் சைவர்களாக வாழ்ந்து, எல்லா நலன்களும் பெறவேண்டுமென்ற நாவலர் பெருமானின் பெரு நோக்கமும் அப்போதுதான் கைகூட வழி பிறக்கும்.

0 0

ஞானமும் அறிய வேண்டின்
நன்றென வாழுமுற்றீர்
காலமும் கழியவான
அல்லல் ஒழியகில்லீர்
சோகமும் வேண்டா ஆசைப்
பற்றுக் குரோதம்
நீங்கி
சீலமும் நோன்பு மல்லாச்
[illegible]
வள்ளியவரே.

— அப்பர் சுவாமிகள்

ஐயாறன் எழுதுவது

சென்னைக் கடற்கரையிலே பாரதியாருக்கு வைத்த சிலை, புயலில் கீழே விழுந்து நாசமுற்று விட்டதல்லவா? சிலையின் பீடம் மட்டும் சென்ற ஒரு மாதத்துக்கு மேல் மொட்டையாக இருப்பதை, 'ஆனந்தவிகடன்' பத்திரிகை படம் பிடித்துப் போட்டு, வேறு நாடுகளில் பாரதியாரைப் போற்றுகையில், அவர் வாழ்ந்த சென்னையிலே இன்றிருப்பதைச் சுட்டிக்காட்டி மற்ருேர் சிலையை ஏன் இன்னும் வைக்கவில்லை என்று கேட்டுள்ளது.

உலகத் தமிழ் விழாவின் போது சென்னைக் கடற்கரையில் வைத்த மற்றச் சிலைகளெல்லாம் அப்படியே இருக்கையில் பாரதியாரின் சிலைமட்டும் விழுவானேன்? அந்தச் சிலையைப் பலமாக [illegible] நாவலர் பெருமானுக்கும் மற்றும் பல தமிழ்ப் பெரியோர்களுக்கும் சிலை வைக்கும்போது, [illegible] சிலையெழுப்பிகளை இப்படி பாரதியார் ஆவேசித்துள்ளாரா? இப்படிப் பல கேள்விகள் எழுகின்றன.

இவைகள் பற்றிச் சற்று சிந்தித்தபோது, நாவலர் சிலையைச் சென்னைக் கடற்கரையில் வைக்காததும் ஒருவிதத்தில் நல்லதென்றே பட்டது. காற்றிலே நாவலர் சிலை இவ்விதம் விழுந்து சிதைந்திருக்குமாயின் நமக்கெல்லாம் எப்படியிருக்கும்! நடப்பதெல்லாம் நன்மைக்கேயல்லவா?

0 0

நேற்று இரு சைவ அன்பர்கள் வந்தனர். யாழ்ப்பாணத்திலே நாவலர் சிலையை ஸ்தாபிப்பது ஒருபுறமிருக்க நல்லூரிலே ஒரு சைவப்பிரகாச மடம் அமைத்து சிவபூசை, மகேஸ்வர பூசை, சிவபுராண படனம், வேதாகம தேவார பாடசாலை என்றென்றும் நின்று நிலை, நல்லூர் தெற்கு வீதியில், நாவலர் பெருமான் ஒரு காணி வாங்கி இப்பணிகளைச் செய்துவந்ததாயும், அந்த இடத்தை அரசாங்கம் இப்போது எடுத்துக்கொண்டதென்றும், அந்தத் தர்மங்கள் நடைபெறவில்லையென்றும் வருத்தத்துடன் தெரிவித்தனர்.

நாவலர் பெருமானுக்குச் சிலை வைப்பது நல்லதே. ஆனுல் அத்துடன் நமது கடமை முடிந்துவிடாது. சைவம் வளர அவர் இருவுள்ளம்கொண்டு ஆரம்பித்த தர்மப்பணிகளை நிறைவேற்றுவதுதான் அப்பெருமானுக்கு நாம் உண்மையில் செய்யும் மரியாதையாகும்.

பள்ளிக்கூடங்களையும் அவற்றின் சொத்துக்களையும் சட்டம்போட்டு அரசாங்கம் கைப்பற்றியதால், கல்வி முறையே கெட்டுவிட்டதென்று பெரும்பான்மையினர் [illegible] ஆட்சேபிக்கின்றனர்.

அது எப்படியாயினும், நல்லூரில் சைவ மடாலயம் கட்டுவதற்கென்றே நாவலர் பெருமான் சைவப்பெருமக்களின் உதவியால் வாங்கிய காணியை, அரசாங்கம் எடுத்துக்கொண்டது உண்மையாயின், அது என்ன நியாயம்! இதற்குக் கேள்விமுறை இல்லையா?

இந்து மாமன்றம் உள்ளிட்ட சைவ ஸ்தாபனங்கள் உடன் இதில் கவனம் செலுத்தி, நாவலர் பெருமானின் இப்புனித நோக்கம் நன்கு நிறைவேற, முதலில் அக்காணியை அரசினிடமிருந்து திரும்பப்பெற்று எல்லா நடவடிக்கையும் எடுக்க

[10-ம் பக்கம் பார்க்க)

நெற் கிருமிப் பீடைகள் யாவற்றையும் அறவே ஒழிக்க உபயோகியுங்கள்

'என்றெக்ஸ்' 20

என்றின் என்னும் பொருளின் வலுமிக்க உருவம்

நெற் பீடைக் கிருமிகள் எத்தனையோ. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வகையான, விலையுயர்ந்த கிருமிநாசினிகள் சிபார்சு செய்யப்படுகின்றன. ஆனுல் நெற் பயிரைத் தாக்கும் எல்லா வகைக் கிருமிப் பீடைகளையும் சிக்கனமாக அறவே அழிக்க வல்லதென்று நிருபிக்கப்பட்ட கிருமிநாசினி ஒன்றுதான் உண்டு. இத்தகைய சஞ்சீவி மருந்தே 'என்றெக்ஸ்' 20. இது நெற் கிருமிப் பீடைகள் யாவற்றையும் போகத்துக்குப் போகம், வருடத்துக்கு வருடம் வெகு செம்மையாகக் கட்டுப்படுத்த வல்ல கிருமிநாசினியெனப் பயிர்ச் செய்கையாளர்கள் மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளார்கள். சேற்று நில நெற்காணிகளிலும் மேட்டு நிலக் காணிகளிலும் இலங்கையிலும் நெல் விளையும் உலகின் எல்லாப் பாகங்களிலும் இவ்வாறு நிருபிக்கப்பட்டிருக்கிறது.

என்றெக்ஸ்' 20 முத்திரிக்கையிட்ட, கலப்படஞ் செய்ய இடமளிக்காத 16 திரவ அவுன்ஸ் போத்தல்களிலும் 1, 4, 45 கலன் கலங்களிலும் கிடைக்கும்.

உங்கள் நெற்பயிரை எல்லா வகையான கிருமிப் பீடைகளிடமிருந்தும் காப்பாற்றுவதற்கு பயிர் 10-14 நாள் வளர்ச்சியடைந்திருக்கும் பருவத்தில் நன்ருக 'என்றெக்ஸ்' 20 தெளிக்கத் தொடங்குங்கள். பின்னர் மாதம் ஒரு முறை தெளித்து வரவும். 2 கலன் நீருக்கு 1 திரவ அவுன்ஸ் 'என்றெக்ஸ்' 20 வீதம் கலந்த 32-40 கலன் தெளி திரவத்தை ஓர் ஏக்கருக்குத் தெளிக்கவும். இதற்காகும் செலவு, உபயோகிக்கும் அளவுப் பிரமாணத்தையும் கொள்வனவு செய்யும் அளவையும் பொறுத்து, ஏக்கருக்கு ஒரு முறைக்கு ரூ. 6/- முதல் ரூ. 10/- வரை அமையும். பீடைகளின் தொல்லையற்ற ஆரோக்கியமான பயிரும் அமோக விளைச்சலும் கிடைப்பதற்கு இது அற்ப செலவே.

ஷெல் ரசாயனப் பொருட்கள் SHELL

ரூக
டு
பாணம், செவ்
ட்டுமியில்
டு உடுவில்
ப்பிரல் 7,8,9
ட பெருமன
சபைக் கூட்
ானிக்கப்பட்
ஆட்டுமென்ற
வரவேற்பு
கத் தெரிவு
ர்.

எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயன் மாவிக்காரெனில்.
AGENTS
ரேயல் டிஸ்பென்ஸரி
PHONE 397 JAFFNA

நாடு சிரிக்க ஏடுதூற்றவா வாழ்வு

— நீலா —

இன்றைய சமுதாயத்திலே மிகத் தீவிரமாக பரவிவரும் [illegible], அருவருக்கத்தக்க கீழ்த்தரமான குற்றங்கள் நாளுக்குநாள் ஒழுக்கத்தையும், இரக்கத்தையும், சீலத்தையும் மென்மையையும் அழித்துவருவதுடன் நின்றுவிடாமல் மனிதனையும் அழித்துவிட்டுத்தான்போகிறது. இதற்கெல்லாம் முக்கிய காரணம் என்ன?

நாடகம், சினிமா முதலியவற்றைப்போல் காதலையும் அதற்கு விளக்கம் தெரியாமலே பொழுதுபோக்குச் சாதனமாகக் கருதும் நாகரிகயுகம் இது. "சத்தியவான் சாவித்திரிமேல் காதல்கொண்டான்" என்று கூறும்போது அக்காதலின் தூய்மையைப் பற்றிப் பெருமைபேசும் நல்லவர்கள் இன்று அச்சொல்லைக் கூறுவதற்கு நாக்கூசும் அளவிற்கு இக்கால இளைஞர்களும் யுவதிகளும் [illegible] அதற்கு விளக்கம் தந்துகொண்டிருக்கிறார்கள். அம் மென்மையான, தூய்மையும் நளினமும் நிறைந்த சொல்லின் போர்வையில் எத்தனை கொலைகள்! எத்தனை தற்கொலைகள்! சிசுக் கொலைகள்தான் எத்தனை;

ஆம்! அன்று வீட்டினுள் அடைந்து கிடந்த பெண் இன்று வெளியுலகில் சுதந்திரமாக நடமாட ஆரம்பித்ததுடன் "இருக்கவேண்டிய இடத்தில் இருக்கும்வரைதான் பெண்ணுக்கு மதிப்பு" என்பதை மறந்தவர்கள் பழித்துரைக்கும்வகையில் [illegible]மாக நடந்துகொள்கிறாள். இதற்கெல்லாம் நம் சகோதரிகள் பெருமளவில் காரணமாக இருந்துவருகிறார்களே என்பதை எண்ண வேதனையாக இருக்கிறது.

ஆடைக் குறைப்பின்மூலம் வளர்க்கப்பட்டும் நாகரீகம் இன்று இளம்பெண்கள் மத்தியில் விஷம்போல் பரவி வருகிறது. இன்றைய சினிமா கதாநாயகனைப் போல் கவர்ச்சியின் மூலம் ஆண்களின் உள்ளத்தில் பிர[illegible] அடைய விரும்பும் நம்சகோதரிகள் அதனால் விளையும் தீமைகளைச் சற்றேனும் சிந்தித்துப் பார்க்கிறார்களா?

கவர்ச்சியின்மூலம் ஆடவரின் மனதைச் சலனப்படுத்தி அவர்கள் உள்ளத்தைத் தவறான பாதைக்கு இட்டுச்செல்வதுடன் அவர்கள் நின்றுவிடவில்லை. அவர்கள் பழிச்சொல்லுக்கும் வெறிக்கும் இரையாவதுடன் தங்களை அழிவும் பாதைக்கு இட்டுச்சென்று பெண்குலத்தின் பெருமையையே குழி தோண்டிப் புதைத்துவருகிறார்கள். அந்நேரங்களில் தங்களைப்பற்றி ஆண்களின் மத்தியில் எழுப்பப்படும் பிரச்சாரத்தையும், இருக்கும் மதிப்பையும் அஃது எத்தன்மையினது என்பதையும் சிந்தித்துப் பார்ப்பதற்கு அவர்களின் வேகம் இடம்கொடுப்பதில்லை.

அடக்கமான அழகுக்கும் ஆடம்பரமான அழகுக்கும் எத்தனை வித்தியாசம். கவர்ச்சி வேண்டுந்தான். ஆனால் அது வெறியைத் தூண்டக்கூடாது. கண்ணைக் கவரும், கலாசாரத்தை விரும்பும் மக்கள் மறைந்திருக்கும் மருக்கொழுந்தைத் தேடிப் போகவில்லையா?

ஆம்? ஆடம்பரத்தைக் கண்டு தன் நிலையிழக்கும் பெண் வாழ்க்கைக்குத் தேவையான ஸ்திரமான அத்தியாயத்தை அமைக்க மறந்துவிடுகிறாள். உறுதியற்ற அபிப்பிராயம் தன்மேல் எழுவதும் [illegible] போல் அவர்கள் ஆடம்பரத்தில் அமைக்கும் வாழ்க்கையும் சரிந்து கலைகுன்றி விடுகிறது. நாகரீகம் "[illegible]ப்போன பலூனைக் கண்டு குழந்தை ஏங்குவதைப் போல் ஏங்கித் தொடங்குகிறார்கள்; ஆண்களைக்காட்டிலும் பெண்கள்தான் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். இன்று நாட்டிலே நடக்கும் அளவற்ற அழிவுக்கு இந்த ஆடைக்குறைப்பும், உறுதியற்ற உள்ளமும் மட்டும் அல்லவா காரணமாக அமைகின்றன.

உழைத்துப் பிழைக்க எத்தனையோ நேர்மையான வழிகளிருக்க கேவலமான குறுக்குப்பாதையில் முன்னேறத்துடிக்கும் [illegible]மாக நடக்க எண்ணுபவர்கள் தங்கள் செய்கைகளால் தங்கள் இனமே சாதிக்கப்படுவதை ஏன் மறந்துவிடுகி

[7-ம் பக்கம் பார்க்க]

சுவையாகச் சமைப்போம்

தேங்காய் சாதம்

தேவையானவை

தேங்காய்த்துருவல் — 1 மேசைக்கரண்டி
உளுத்தம்பருப்பு — 2 தேக்கரண்டி
மிளகாய் வற்றல் — 2
நெய் — 4 தேக்கரண்டி
பெருங்காயம் — சிறிதளவு
கடுகு — அரை தேக்கரண்டி
கறிவேப்பிலை — 1 ஆர்க்கு
உப்பு — 3 தேக்கரண்டி
அரிசிச்சாதம் — 1 படி

இருப்புச்சட்டியில் நெய்விட்டு உளுத்தம்பருப்பு, மிளகாய்வற்றல், தேங்காய்த்துருவல் முதலியவற்றைப் பொன்னிறமாக வறுத்து எடுத்து அம்மியில்வைத்துப் பொடி செய்துகொள்ளவும். அகலமான பாத்திரத்தில் சமைத்த சாதத்தைக் கொட்டி ஆறவைத்து உப்பைப் பொடிசெய்து போட்டுக்கலந்து கொள்ளவும். பின்பு கடுகு தாளித்துக்கொட்டி, கறிவேப்பிலை போட்டு அரைத்து வைத்துள்ள பொடியைத்தூவி ஒத்தாற்போல் பிசையவும். தேவைக்கேற்ப நெய் அல்லது எண்ணெய் சேர்த்துக் கொள்ளவும்.

சரோஜினி சங்கர்

அலங்கோல உடையை அகற்றுவீர்

— செல்வி. கே; பி. வதி —

அமெரிக்காவில்தான் முதன்முதலாக "மினிஸ்கேட்" மோகம் ஏற்பட்டது. பின் இந்த மோகம் நம் தமிழ் மகளிரையும் பற்றத் தலைகாட்டும் இதை அணிந்தாலென்ன என்று நினைத்து அவர்களும் அணியத் தொடங்கி விட்டார்கள். ஆனால் அமெரிக்க மக்கள் காலம் செல்லச்செல்ல நாளடைவில் 'மினிஸ்கேட்' உடையை வெறுத்து ஒதுக்கித் தள்ளி வருகிறார்கள்.

ஆனால் நம் தமிழ் மகளிரோ இதற்கு எதிர்மாறாக இதனை அணிந்து வருகிறார்கள். இதை அணிவதால் தங்களுக்கு ஒரு மதிப்பும் பெருமையும் என்று நினைக்கிறார்கள். ஆனால் பார்ப்பவர்களுக்கு அந்த உடை ஒரு அலங்கோலமாகவே இருக்கிறது. இந்த உடை தமிழர் முறைக்கு உகந்ததல்ல.

ஒருவரைப் பார்த்து ஒருவராக இப்பொழுது இந்த மகளிர் அனைவரும் அணிகிறார்கள். அழகான நம் தமிழ் மகளிர் இந்த மினிஸ்கேட் உடையை அணிவதால் அவர்களுடைய அழகெல்லாம் மங்கி மடிகின்றது. நம் தமிழ் மகளிருடைய மதிப்பும் மானமும் கெடுகின்றன. ஆகவே நம் மகளிர் அனைவரும் ஒன்றுசேர்ந்து இந்த அலங்கோல உடையையணியாமல் விடுவார்களானால் நம் தமிழ்நாடு முன்னேறும் அத்துடன் மட்டுமல்ல. மகளிருக்கும் நன்மதிப்பு உண்டாகும். நம் தமிழ்நாடு முன்னேறுவதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

இதுமட்டுமல்ல சிறு பிள்ளைகள்தான் இதை அணிந்தால் பரவாயில்லை. வளர்ந்த இளந்தமிழ் மகளிர் சிலர் அணிந்துகொண்டு வீதியால் செல்கிறார்கள். அவர்கள் இதே உடையிலே கூடிய கவனத்தைச் செலுத்தாமல் பொன்னான நேரத்தை மண்ணாக்காமல் கடவுள் வழிபாடு போன்ற தருமங்கள், தூய மனப்பான்மை என்பவற்றில் கூடிய கவனத்தைச் செலுத்தும்படி நம் தமிழ் மகளிர் அனைவரையும் [illegible] வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அழகை வெளியாக்கும் கண்ணாடி

— செல்வி. மோகன். நேசராணி நவரட்ணம் —

பெண்களென்றால் பொதுவில் "மூக்கும் முழியுமாக" இலட்சணமாயிருக்க வேண்டும். அப்படியில்லாதவர்கள் ஓரளவிற்கு இயற்கையோடு ஒட்டிய வகையில் நம் பண்பாட்டிற்கேற்ற முறையில் சொற்ப அலங்காரம் செய்துகொள்ளலாம். "அலங்காரம்" எனும் பெயரில் அலங்கோலத்தை நடமாடவிடாது சிறிது கவனம் செலுத்தவேண்டும். நம்மை மற்றவர்க்கு முதலில் முகம்தான் அழகை வெளியாக்கும் கண்ணாடி. அக்கண்ணாடி போலான முகத்தில் களங்கம் உண்டாக்குமாப்போல பலருக்கு பருக்கள் வந்த வண்ணமேயுள்ளன. இப்படியானோர் எக்காரணம் கொண்டும் பருக்களை உடைக்கக்கூடாது. உடைப்பின் அவ் இடங்கள் குழி விழுந்து கன்னங்களின் அழகைக் கெடுத்து விடுகின்றன. இப்பருக்கள் தோன்றாதிருக்க அடிக்கடி உணவில் வாழை, பழம், கீரை, பச்சைக் காய்கறி, குளிர்ந்த நீர் இவற்றைச் சேர்க்கவேண்டும். பண்டைய வழக்கப்படி முகத்தில் பச்சை மஞ்சள் அல்லது "கஸ்தூரி மஞ்சள்" பூசி சிறிது ஊறவிட்டுக் குளிர் நீரில் கழுவவேண்டும். இப்படிச் செய்வதால் [ஒரு சிலருக்கு முகத்திலுள்ள ரோமங்களும்] "வடு"க்களும் நாளடைவில் மறைந்து விடுகின்றன. கண்களே பெண்களின் அழகைக் காட்டும். எனவே சிறிய கண்களையுடையோர் கண்மை கொண்டு புருவங்களை நீளமாகத் தீட்டிடலாம்... "கயல்விழி" போற்சாயலைத் தரலாம். அதேபோல, உடலையும் பராமரிக்க வேண்டும். அதிக சதைப் பிடிப்புமின்றி, அதேசமயத்தில் ஒல்லியுமின்றி ஓரளவிற்கு இருக்கவேண்டும். இதற்கு "உண்டி சுருக்க வேண்டும்" சத்தான உணவுகளை மிதமாக [அளவிற்கு] உண்ணவேண்டும். மனதில் கவலை இருக்கக்கூடாது. அப்படியிருப்பின் அது முக அழகை அடியோடு அழித்துவிடும். தலை முடியைத் தினசரி சீப்பினால் வாரிவிட வேண்டும். பேன், பொடுகு முதலியன சேரவிடக் கூடாது. வெயிலில் திரியாது "குடை"யுடன் செல்லவேண்டும். அளவுக்கதிகமான வெயிலினால் முக "செம்மை" நிறமாக மாறுகிறது. கண்ட எண்ணெய்களையும் பாவியாது தேங்காய் எண்ணெய், விளக்கெண்ணெய்களை பாவிக்கலாம். இப்படியே தமது நிறம் உடலுக்கு ஏற்றவாறு ஆடையணிகளைத் தேர்ந்தெடுத்து அணியவேண்டும்.

பெண்களின் நடையுடைகள் பற்றிய கடிதம்:

படிதாண்டாப் பத்தினி

மினிஸ்கேட் என்பது ஒரு புதுவிதமான உடை. இதை மேல்நாட்டுப்பெண்கள் தங்கள் உடை அலங்காரத்துக்காகப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் இலங்கைப் பெண்கள் இதைப்பின்பற்றி வருகின்றனர். என்ன காரணமோ தெரியவில்லை. இலங்கையில் வசிக்கும் பெண்களுக்கு கட்டாயம் மினிஸ்கேட் உடை தேவையில்லை. ஏனென்றால் பஸ்ஸில் ஏற இறங்க இது மிகவும் கஷ்டத்தைக் கொடுக்கின்றது. மினிஸ்கேட் அணிவதால் வாலிபர்களுக்கு மிகவும் கொண்டாட்டமாக இருக்கும். ஏனென்றால் பஸ்ஸில் ஏறுவதற்குப் பெண்களைத் தூக்கிவிடவேண்டும். இவையெல்லாம் வேண்டப்படாத உடையலங்காரம், நாய்க்கேன் போர்த்தேங்காய் என்பதுபோல இவர்களுக்கேன் மினிஸ்கேட் உடை. இவர்களெல்லாம் படிதாண்டாப் பத்தினிகள் என அழைப்பதில் கொஞ்சமேனும் தவறில்லை. மினிஸ்கேட்மோகத்தை இலங்கை மங்கையரே துறவுங்கள்.

அளவையூர்
கே. சத்தியமூர்த்தி

ஆபாச உடையா அழகைக் கூட்டுகிறது

— சுந்தரவல்லி சதாசிவம் —

மாநிலம் போற்றும் மங்கையராகத் திகழ வேண்டிய தமிழ் நங்கையர் அங்ஙனம் போற்றப்படாமல் இருப்பதற்கு காரணம் என்ன? அவர்களுடைய நடை, உடைகளே.

அழகாகத் தலைவாரிப் பூச்சூடிச் சேலையணிந்து அழகுக்கு அணிகலனாகத் திகழவேண்டிய பெண்கள் ஆபாசத்தின் இருப்பிடமாக விளங்குவதற்கு அவர்களது மினிஸ்கேட், மினிசாரியே காரணமாகும். நாம் உயர்தக்கல்வி கற்றுப் பெரிய பெரிய உத்தியோகம் வகித்தாலும் தமிழ்ப் பண்பாட்டைக் கைவிடலாகாது. நல்[illegible] கல்விகற்ற அறிவுடைய நங்கையர் ஒருபோதும் மினிஸ்கேட்டையோ, மினிசாரியையோ அணியமாட்டார்கள். பாரதத்தில் பிரதமராகத் திகழும் திருமதி இந்திராகாந்தி தன் உடையலங்காரத்தில் மாதருக்கோர் மணிமகுடமாய் அமைந்துள்ளார்.

பெண்கள் அழகுபொலிய விளங்குவதற்காகவே மினிஸ்கேட் அணிவதாகச் சிலர் கூறுகிறார்கள். அப்படியானால் முற்காலத்தில் அழகுக்கு இலக்கணமாகத் திகழ்ந்த சகுந்தலை, சீதை, தமயந்தி முதலியோர் ஆபாச உடைஅணிந்தா தங்கள் அழகைக் கூட்டினார்கள் இல்லையே. அப்படியிருக்க நம் நாகரீக நங்கையர் ஏன் பெண்மைக்கே இழுக்கு

[7-ம் பக்கம் பார்க்க]

மினிஸ்கேர்ட் மோகம்

மானத்தை விலைகூறும் மினிஸ்கேர்ட் வேண்டாம்

— செல்வி. தனலக்சுமி வைத்திலிங்கம் —

ஈழம் வாழ்மக்கள் தமக்கென ஒரு நாகரீகம் உடையவர்களாக அதனை மதித்துக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். இப்பண்பாட்டைப் பெரிதும் பேணிக்காத்து உறுதுணை புரிபவர்கள் நம் நாட்டுச் சகோதரிகளேயாகும். பன்னிரண்டு முதல் பதினாறு முழச் சேலைவரை அணிந்து அழகிய நுதலில் பொட்டிட்டு அடக்கமான அழகு [illegible] விளங்கும் நம் சகோதரிகளை இந்த 'மினிஸ்கேர்ட்' மோகம் எப்படிக் கவ்வியது. மினிஸ்கேர்ட் அணிந்து நம் பண்பாட்டை இருளடையச் செய்யாதீர்கள். மேலைத்தேச மங்கையர் பலர் நம் சேலையை விரும்பியணிந்து அந்நாகரீகத்தில் [illegible] கொள்வதை மினிஸ்கேர்ட் மங்கையர் எப்படி உணர்வார்கள்? மினிஸ்கேர்ட் நம் நங்கையரின் மானத்தை [illegible] விலைகூறி விற்கிறது. சகோதரிகளே வேண்டாம் இந்த மினிஸ்கேர்ட் மோகம்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ்வாய் 7—1—69

[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீ அல் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 பக்திப்பாடல்கள், 7-00 [illegible], 8-00 இசை வேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ அல் 49 மீ

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீ அல் 61 மீ

மாலை 5-00 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-30 தொழிலாளர் வேளை.

இரவு 6-15 தமிழோடிசைபாடல், 6-30 பேச்சு, 6-45 [illegible], 7-00 [illegible] சஞ்சிகை, 7-30 [illegible], 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு — "திருக்குறள் மாண்பு" — குன்றக்குடி அடிகள், 9-45 பாட்டு — ராமேஸ்வரி விஜயரத்தினம்.

இன்றைய பலன்

செவ்வாய்க்கிழமை
7-1-69
மார்கழி 24உ

திதி- சதுர்த்தி.

நட்சத்திரம்- ஆயிலியம் காலை 6-45 மேல் மகம்.

ராகுகாலம்- 3—32 5-02.

யமநேரம்- 11-02—12-32.

இன்று பிறந்தவர்களுக்கு:- உங்கள் திறமை உங்கள் பலரது பாராட்டுதலைப் பெறும். பொதுத்தொண்டில் ஈடுபடுவதற்கான ஆர்வம் பிறக்கும். அரசியல்வாதிகளுக்கு நல்ல எதிர்காலமுண்டு. குடும்பத்தில் சிறிய பூசல் தோன்றி மறையலாம். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை முடிவில் வெற்றியைத் தேடித்தரலாம். தொழிலாளர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சிலருக்குப் பதவி உயர்வும் ஏற்படும். பிள்ளைகளின் ஒழுங்கின் கல்விநிலை உங்களுக்கு கவலையைத் தரலாம்.

மேஷம்- தந்தையின் புத்திமதி, தாராளமனம்.

ரிஷபம்- மனம்போல் வாழ்வு, மக்கள் தொடர்பு.

மிதுனம்- நிதியில் உயர்வு, நீதியில் நாட்டம்.

கடகம்- குழப்பநிலை, கடன்படநேரிடும்.

சிம்மம்- இன்னலின் பின்னல், இலாபம்.

கன்னி- மணவாழ்வில் மலர்ச்சி, மனதில் ஆனந்தம்.

துலாம்- ஏக்கத்தின் சாயல், ஏமாற்றமுண்டு.

விருச்சிகம்- தாய்வழிப் பெருமை, தரமான வாழ்வு.

தனுசு- புத்திரர் புகழ், புதிய உற்சாகம்.

மகரம்- ஆயுதபயம், அவசரம்வேண்டாம்.

கும்பம்- துளிர்விடும் காதல், ஒளிவிடும் வாழ்வு.

மீனம்- சோடி நடக்கும், விழிப்புடன் இரு

— சோதிடக்கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

நெடுந்தீவு சென். ஜோன்ஸ் சாம்பியனானது

நெடுந்தீவு, திங்கள்

இலங்கை விளையாட்டமைச்சின் ஆதரவின்கீழ் நெடுந்தீவு காரியாதிகாரி பிரிவில் சென்ற டிசம்பர் 25-ம் திகதி ஆரம்பமான நெடுந்தீவு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இறுதி ஆட்டத்தில் நெடுந்தீவு கிழக்கு ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் நெடுந்தீவு மத்தி சென். ஜோன்ஸ் கழகமும் மோதிக்கொண்டன. மிக விறுவிறுப்பாக நடந்த இப் போட்டியில் இறுதிவேளையில் சென். ஜோன்ஸ் கழகம் ஒரு கோலைப் போட்டு 1968-ம் ஆண்டு உதைபந்தாட்ட சாம்பியன் பட்டத்தைத் தட்டிக்கொண்டது.

போட்டியில் பங்குபற்றிய இருதரப்பு வீரர்களும் திறமையாக விளையாடினார்கள். குறிப்பாக ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் கோல் காப்பு வீரன் பி. யோகநாதனின் தரமான ஆட்டம் ரசிக்கும்படியாக இருந்தது.

நெடுந்தீவு விளையாட்டுத்துறை அதிகாரி திரு. எஸ். எஸ். முருகேசு இப் போட்டிக்கான ஒழுங்குகளை செய்திருந்தார்.

கோழி நோய் ஊசிமருந்து

கண்டத்தரிப்பு, திங்கள்

வலிகாமம் மேற்கு காரியாதிகாரி பிரிவில் கிராம சேவையாளர் பிரிவுகளில் கோழிகளுக்கான ஊசிமருந்து ஏற்றப்பட்டு வருகிறது. கோழி அம்மை, கோழிக்கொல்லி ஆகிய நோய்களுக்கு இலவசமாக இவ் ஊசிமருந்து செலுத்தப்படுகிறது!

நாடு சிரிக்க...

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

ரூர்கள்? தனி ஒரு பெண் வீதியில் தலைநிமிர்ந்து நடக்கவும் முறையற்று நாணித் தலை குனியவேண்டிய நிலையில் உலகம் முன்னேறியிருப்பதற்கு யார் காரணம்?

பெண்ணே! நீயே உன் அழிவுப்பாதையைத் தேடிக் கொள்ளலாமா? வீரர்களையும், வள்ளல்களையும், சிலர்களையும், மகாத்மாக்களையும், ஞானிகளையும் கற்புக்கரசிகளையும், உத்தமிகளையும் உருவாக்கி நாட்டிலே உலவவரும் நீயே இப்படி முறைதவறி அற்ப ஆசைகளுக்குஇடம்கொடுத்தால்...

நாளடைவில் நாட்டின் கதி என்னாகும். சிந்தித்துப் பார்த்தாயா? நாட்டின் கண்களே! உங்கள் கண்களை நீங்களே குத்திக்கொள்ளலாமா?

பெண்ணே உன் அற்ப ஆசைகளுக்கு உறுதியான உள்ளத்தில் இடம் கொடாதே! அதனால் வரும் விபரீதங்களுக்கும் ஏமாற்றங்களுக்கும் இடம்கொடுத்து மரணத்தைத் தேட முனையாதே! நாடு போற்றும் நல்லோர்களை உருவாக்கி விட்ட ஆவவேண்டிய நீ, நாடுசிரிக்க, ஏடு தூற்ற [illegible] தலைகுனிந்து நிற்கவேண்டிய நிலை இன்று ஏற்பட்டுவிட்டது. இனிப்பெருமிதமடையும். அதற்கு உன்னை மேலும் தயார்படுத்தாதே. பெண்கள் பெண்களாகவே இருப்போம்! நாட்டின் கண்களாக மாறுவோம்!

ஆபாச...

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

தலும் ஆடைகளை அணிய வேண்டும். மினிஸ்கேர்ட் அணிவோரைக் கேலி செய்வதை நாம் வீதிகளிலும் பத்திரிகைகளிலும் பார்க்கக் கூடியதாக இருக்கிறது.

விண்ணும் மண்ணும் போற்ற வாழ்ந்த கண்ணகி, சீதை முதலியோரின் வழித்தோன்றலாகிய நாம் நாகரிகத்தின் பெயரால் மினிஸ்கேர்ட், மினிசாரி அணிந்து ஆபாசமாகக் காட்சியளிக்காமல் பெண்மையைக் காக்கும் சேலையுடுத்து அழகின் பிறப்பிடமாக எழிலின் உறைவிடமாக இருக்க வேண்டும்.

"சியவச" டிக்கட் விற்பனை

பருத்தித்துறை, திங்கள்

கல்வித் திணைக்களம் இவ்வாண்டு கொண்டாடப்படவிருக்கும் நூறாவது ஆண்டுவிழா சம்பந்தமாக வடமராட்சிப் பாடசாலைகள் 'சியவச' டிக்கெட்டுகள் விற்பனையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. இப்பகுதியில் நெல்லியடி மத்தியமகாவித்தியாலயம் இதிலிருந்து அதிகமான வருமானம் பெறக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கல்வி அதிபர் ஒவ்வொரு வகுப்புக்கும் சென்று இதன் முக்கிய தத்துவத்தை விளக்கி வருவதாகத் தெரிகிறது.

தமிழ் சார்ஜண்ட் நியமனம்

முல்லைத்தீவு, திங்கள்

வவுனியா எம். பி. யின் முயற்சி வெற்றியளித்துள்ளது. முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு ஒரு தமிழ் சார்ஜண்டையும் ரிசேவ் டியூட்டிக்கு தமிழ் தெரிந்த பொலிசாரையும் நியமிக்கவேண்டும் என வடமாகாணப் பொலிஸ் சுப்ரீண்டனை கேட்டபடி அவர் தமிழ் சார்ஜண்ட் ஒருவரை அனுப்பியதுடன் ரிசேவ் கடமைக்கு தமிழ் தெரிந்தோரை நியமிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இடமாற்றங்கள்

அனலைதீவு, திங்கள்

தெமட்டகொட அரசினர் தமிழ்ப்பாடசாலையில் கடமையாற்றிய திரு. க. மாணிக்கம் ஆசிரியர் அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

0 0

கோப்பாய், திங்கள்

வலி-கிழக்கு காரியாதிகாரி கந்தோரில் விகிதாசாரக் கடமையாற்றி இம்மாதம் முதல் கிளிநொச்சி காரியாதிகாரி கந்தோருக்கு இடமாற்றம்பெற்றுச் செல்லும் திரு. என். சந்திரசேகரத்துக்கு வலி-கிழக்கு காரியாதிகாரி திரு. வி. கந்தப்பிள்ளை தலைமையில் பிரிவுபசார விழா நடாத்தப்பட்டது.

0 0

சுன்னாகம், திங்கள்

த. சுவரலிங்கவனிதா மட்டுவில் சபையிலிருந்தும் மு. கனிமணிமுத்து சுன்னாகம் பட்டினசபையிலிருந்தும் சுன்னாகம் பட்டினசபைக்கு விகிதாசார இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

0 0

இளவாலை, திங்கள்

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. நவரத்தினசிங்கம் புலோலி ஆண்கள் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0

கோப்பாய், திங்கள்

கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக திரு. தர்மபாலா நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிலையத்தில் இருந்த இம் மாதம் முதல் 19 பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மாதகல் சென். தோமஸ்

ச. ச. நிலைய விளையாட்டு போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ்.

மாதகல் சென். தோமஸ் சனசமூகநிலையத்தின் 15வது ஆண்டு நிறைவு விழாவின் பிரதம விருந்தினராக வலி-மேற்கு காரியாதிகாரி திரு. எஸ். மாணிக்கநடராசா பங்குபற்றி விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார். நிலையத்தலைவர் திரு அ. ஞானியர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திருவாளர்கள் ஏ. அருளானந்தம், ஜே. மா. ஜோசேவ், செ. அ. சேவியர் வெபிஸ், செல்வி பத்திரிசா வைலெற், மரியநாயகம், வண பிதா எல். யோசவ் ஓ. எம். ஐ ஆகியோர் உரைநிகழ்த்தினர். கூட்ட முடிவில் திரு நீ. ஜோர்ஜ் மரியதாஸ் நன்றி கூறினார்.

விளையாட்டுகளில் வெற்றி பெற்றவர்களின் விபரம் வருமாறு:-

ஒரு மைல் ஓட்டம்: இரு ஆர் திருநாவுக்கரசு, என் தேவராசா

சிரேஷ்ட பிரிவு: 200 யார் ஓட்டம் எஸ் மரியநாயகம், ஏ அமலதாஸ்

தடை தாண்டி ஓட்டம்: என் தருமகுலசிங்கம், ஏ இம்மனுவேல்

நீளம் பாய்தல்: வி சுப்பிரமணியம், ஏ அமலதாஸ்

கனிஷ்டபிரிவு: சாக்கோட்டம்: ஏ. இம்மனுவேல், ஏ [illegible]

100 யார் ஓட்டம்: எம் பிரான்சிஸ், ஜே பி சேவியர்,

[illegible]; ஏ பி [illegible], பி [illegible].

கீழ்ப்பிரிவு; மூன்றுகால் ஓட்டம்: ஜே பி அமிர்தகுமார், ஏ ஜெயரட்ணம்.

200 யார் ஓட்டம்: ஐ ஜோசப், சி பி ஜே ஜோசவ்.

நீளம்பாய்தல்: ச பி ஜே ஜோசவ், ஐ ஜேசுதாஸ்.

சிறுவர் 100 யார் ஓட்டம்: ஜோசவ் ஜெயநாதன், அன்ரனி பற்றிக், ஜோசவ் ஜெயரட்ணம், அருள்நாயகம்.

பெண்கள். ஒருமைல் சைக்கிள் ஓட்டம்: திரேஸ் செபமாலை, றஞ்சனி பங்கிராஸ், றுஜேஸ்வரி கிறிஸ்ரினம்.

பத்துமைல் சைக்கிள் ஓட்டம் ஆண்கள்: எஸ் மரியநாயகம். எம் பற்றிக்.

ஆசிய ஆபிரிக்க தினக்கூட்டம்

கொழும்பு, திங்கள்

ஆசிய ஆபிரிக்க ஒருமைப்பாட்டு தினக்கூட்டம் இம்மாதம் 12ம் திகதி கொழும்பு நகரசபை மண்டபத்தில் மாலை நடைபெறவிருக்கிறது. இக்கூட்டத்திற்கு எதிர்க்கட்சித்தலைவர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமை வகிப்பார். பிரதம பேச்சாளர்களாக என் எம் பெரேரா, பீட்டர் கெனமன் மைத்திரிபாலசேனநாயக்கா வி. தர்மலிங்கம் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொள்வார்கள்.

மதகில் வெடிப்பு சாரதிகள் அச்சம்

பூநகரி, திங்கள்

பூநகரி சங்குப்பிட்டி பிரதான வீதியிலுள்ள மதகு ஒன்றில் வெடிப்பு ஏற்பட்டு உடையும் நிலையிலுள்ளது. இதனால் வாகனச்சாரதிகள் பீதியடைந்துள்ளனர். இவ்வெடிப்பு ஏற்பட்டு ஒரு மாதமாகியும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம்.

குருக்கலிட்டி உதயதாரகை

உதைபந்தாட்ட முடிவுகள்

அளவெட்டி, திங்.

குருக்கலிட்டி உதயதாரகை நடத்தும் 11-வது உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி [illegible] விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவருகிறது.

இச்சுற்றுப்போட்டியின் கீழ் நடைபெற்ற சிலபோட்டி முடிவுகள் வருமாறு:

குப்பிளான் ஜெமினி விளையாட்டுக்கழகமும் தையிட்டி ஸ்ரார் ரீம். கழகமும் 1-ம் பிரிவில் மோதியபோது குப்பிளான் 2—1 கோல்களால் எதிர்க்கோஷ்டியைத் தோற்கடித்தது. திரு. நடராசா மத்தியஸ்தம் வகித்தார்.

2-ம் பிரிவில் மாவிட்டபுரம் ஐக்கிய விளையாட்டுக் கழகமும், காங்கேசன்துறை இளந்தமிழர் மன்றமும் மோதியபோது ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிந்தது.

1-ம் பிரிவில் தெல்லிப்பழை விளையாட்டுக் கழகமும் குப்பிளான் ஜெமினி விளையாட்டுக்கழகமும் மோதியபோது குப்பிளான் 2—1 கோல்களால் வென்றது.

ஈவினை மறுக்குமார் இளைஞர் விளையாட்டுக்கழகத்துக்கும், தெல்லிப்பழை விளையாட்டுக் கழகத்துக்குமிடையிலான போட்டியொன்றில் ஈவினை 4—1 கோல்களால் எதிர்க்கோஷ்டியைத் தோற்கடித்தது. திரு. கே. சுப்பிரமணியம் இப்போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார்.

ஈவினை மறுக்குமார் இளைஞர் விளையாட்டுக் கழகமும், குருக்கலிட்டி உதயதாரகை விளையாட்டுக்கழகமும் மோதவிருந்த ஒருபோட்டியில் குருக்கலிட்டி கோஷ்டி சமுகமளிக்காததனால் ஈவினைக்கே வெற்றி என அறிவிக்கப்பட்டது.

பயிர்ச்செய்கை பாதிப்பு வரி அறவிட எதிர்ப்பு

பருத்தித்துறை, திங்.

இவ்வாண்டு போதியமழையின்மை காரணமாகவும் பெருமளவு களையின்மை காரணமாகவும் கரவெட்டி தெற்குப் பகுதிகளிலுள்ள நெற்செய்கை பாதிக்கப்பட்டிருப்பதால் அடுத்தாண்டு இவ்வயல் சொந்தக்காரரிடமிருந்து வரி அறவிடக்கூடாதென கரவெட்டி மேற்கு நெற்பயிர்ச் செய்கைக் குழுவின் காரியதரிசி திரு. சி. மு. மார்க்கண்டு அதிருப்தி தெரிவித்துள்ளார். இதுவிடயமாக மேற்படி குழு மேலதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பிக்கு சம்மேளனத்தின்

பல்கலைக்கழக கோரிக்கை

கண்டி, திங்கள்

"பிக்குகளுக்கென பல்கலைக்கழகம் அமைக்கும் திட்டத்தை ஏற்ற இடத்தில் அமைப்பதற்கான நடவடிக்கையை எடுக்கும்படி பிரதமரையும், கல்வியமைச்சரையும் கேட்டுக்கொள்வதென்ற தீர்மானமொன்று செங்கடகல நிக்காயபிக்கு சம்மேளனம் ஏகமனதாக நிறைவேற்றியிருக்கின்றது.

கண்டியில் நடைபெற்ற சம்மேளனப் பொதுக் கூட்டத்திற்கு வண. மெதகம விஜயரதன தேரோ தலைமை வகித்தார்.

ஆளை மாற்றுகிறது 'ஹோப்' வைத்தியம்

வெள்ளவத்தை திங்கள்

கொழும்பு தபால் தந்திப் போக்குவரத்துத் திணைக்களத்தின் அஞ்சல் அதிபர் நாயகம் காரியாலயத்தில் தமிழ்த் தட்டெழுத்தாளராகக் கடமையாற்றும் யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைச் சேர்ந்த சிங்கராயர் என்பவரை அமெரிக்க 'ஹோப்' கப்பல் ஆளையே அடையாளம் தெரியாதபடி மாற்றியுள்ளது.

திரு சிங்கராயரது முகப்பற்கள் நீண்டு முகம் இவ்வளவு காலமும் ஓரளவு விகாரமாகக் காட்சியளித்தது. ஆனால் சமீபத்தில் ஹோப் கப்பலில் கைதேர்ந்த அமெரிக்க டாக்டர்களின் உதவியினால் நடைபெற்ற அறுவைச் சிகிச்சையின் பின்னர் முன்னால் நீண்டிருந்த பற்கள் நன்றாக உள்ளே தள்ளப்பட்டு முகமெல்லாம் மாறி உதடுகள் இரண்டும் நன்கு பொருந்தும் நிலையில் திரு சிங்கராயர் அசல் ஆணழகன் போலக் காட்சிதருகிறார்.

அகில இலங்கைத் தமிழ்த் தட்டெழுத்தாளர் சங்கத்தின் ஆரம்பகர்த்தாவும் முன்னாள் பொதுச் செயலாளருமான திரு ம. சிங்கராயரை அவரது காரியாலயத்தில் வைத்து நமது நிருபர் பேட்டி கண்டபோது அவர் பின்வருமாறு பதிலளித்தார்:

எனது பிறப்பிலிருந்தே முன்வாய்ப் பற்கள் ஓரளவு முன்னுக்கு மிதந்திருந்தன. சகல உபகரணங்களும் வசதியான சிகிச்சை முறையும் ஹோப் கப்பலில் எனக்குக் கிடைத்தன. அறுவைச் சிகிச்சைக்கு சுமார் 4 மணி நேரங்களே எடுத்தன. ஓரளவு இரத்தம் முரசிலிருந்து வெளியேறியது. புது இரத்தமும் கொஞ்சம் ஏற்றினார்கள். எப்படியோ கஷ்டத்தைச் சமாளித்துக் கொண்டேன்.

ஆப்பிரேஷனின் பின்னும் ஆரம்பத்தில் வலி இருந்தது தான். ஆனால் இப்போது சாதாரணமாகிவிட்டது. மற்றவர்களைப் போலவே சகஜமாக பேசவும் சாப்பிடவும் முடிகிறது.

ஹோப் கப்பல் வைத்தியத்தின் பின்னர் உங்களுக்கு ஏதாவது புதிய பிரச்சினைகள் தோன்றியுள்ளனவா என்று கேட்டபோது அவர் கூறியதாவது:-

நிச்சயமாக எனது மிக நெருங்கிய நண்பர்களே என்னை அடையாளம் கண்டு கொள்ளமுடியாமல் விழிப் போகிறார்கள். மற்றும் [illegible] வந்தபின்னர் எனது முகமே மாறிவிட்டது. இதையிட்டு நான் சந்தோஷப்படுகிறேன். எனது நீண்டநாள் கவலை தீர்ந்து விட்டது.

நிருபர்:— சரி. சம்பிரதாயபூர்வமான ஒரு கேள்வியையும் கேட்க முடிகிறேன். எமது 'ஈழநாடு' பத்திரிகையைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

சிங்கராயர்:— (சிரித்து) பெரிய சினிமா ஸ்டாரிடம் கேட்பதுபோல கேட்கிறீர்களே! என்னுடைய கருத்துப்படி யாழ்ப்பாணத்தின் ஒரேஒரு செந்தமிழ்த் தினசரி 'ஈழநாடு'. நான் அதன் நீண்டகாலவாசகன். இது வளர வேண்டும் வாழவேண்டும்.

நிருபர்:— சினிமாஸ்டார்களையும் அரசியல் தலைவர்களையும்தான் பேட்டி காண வேண்டும் என்பதில்லை. உங்களைப் போன்றவர்களையும் காணலாம். இதனால் மக்களுக்கு நன்மை ஏற்பட வாய்ப்புண்டு அல்லவா? எமது ஈழநாட்டின் சார்பிலும் தனிப்பட்ட முறையிலும் உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றி.

வட இலங்கை பிரயாணிகள் சம்மேளனம் எதிர்ப்பு

சித்தன்கேணி திங்கள்

'காரைநகர்-யாழ்ப்பாணம் இல. 784 பஸ்கள் [illegible] சித்தன்கேணிக்கூடாகச் செல்லவேண்டுமெனக் காரைநகர் இ. போ. ச. டிப்போ தீர்மானிக்கவிருப்பதற்கு வட இலங்கை பொதுப் போக்குவரத்துப் பிரயாணிகள் சம்மேளனம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இவ்வாறு மாற்றஞ்செய்தால் விரைவான பிரயாணத்தை விரும்பும் பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், தொழிலாளர் போன்ற நாளாந்தப் பிரயாணிகள் மேலும் பாதிக்கப்படுவார்களெனவும், இதனால் இவர்களுக்கு வீண் தாமதமேற்படுமெனவும் மேற்படி சம்மேளனம் யாழ்ப்பாண இ. போ. ச. பிரதேச முகாமையாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது.

தேவையெனில் சம்மேளனப் பிரதிநிதிகள் முகாமையாளரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவும் ஆயத்தமாகவுள்ளனரெனவும் அம்மகஜரில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பஸ்ஸில் வந்தவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

புலோலி திங்கள்

மருதங்கேணியிலிருந்து பருத்தித்துறை சேவையில் ஈடுபட்ட இ. போ. ச. பஸ் ஒன்று 45 பிரயாணிகளுடன் குடத்தனை 6-ம் கட்டையில் குடைசாய்ந்தது.

பிரயாணிகளின் உயிருக்கு ஆபத்தொன்றுமில்லாது சிறு காயங்களுடன் உயிர் தப்பினார்கள். பஸ் கண்டக்டர் [illegible] பலத்த காயங்களுடன் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் நடைபெற்ற இப் பஸ் விபத்தில் சிறு காயங்கள் ஏற்பட்ட பிரயாணிகள் அம்பன் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்கள்.

இச்சம்பவம் பற்றி பருத்தித்துறைப் பொலிசார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஜனவரி மாதம் 7-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

யு. என். பீ.யில் சேர்ந்தார்

கொழும்பு திங்கள்

மூதூர் முதலாவது எம். பி.யான ஜனாப் முகமது அலி ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்வதற்கு இவர் ஏற்கனவே விண்ணப்பித்திருந்தார். இவரது விண்ணப்பத்தை ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைப்பீடம் ஏற்றுக்கொண்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

மூதூர் முதலாவது எம்.பியான இவர் தமிழரசுக்கட்சி அபேட்சகராக சென்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பின்னர் கட்சியிலிருந்து விலகி சுயேச்சை உறுப்பினராக ஆட்சியின் பக்கத்தில் விளங்கினார்.

பிரதமர் நேற்றுக்காலை கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து லண்டனுக்குப் பயணமாவதற்கு முன்னர் ஜனாப் முகமது அலி அவரைச் சந்தித்துப் பேசினார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்ததையிட்டு தான் சந்தோஷமடைவதாகவும், நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைவதாகவும் பிரதமர் டட்லி, ஜனாப் முகமது அலியிடம் தெரிவித்தார்.

கைக்கடிகாரங்கள் கைப்பற்றப் பட்டன

நல்லூர் திங்கள்

இரகசிய தகவலொன்றையடுத்து யாழ்ப்பாணம் நகரிலுள்ள கடையொன்றை இன்று காலை திடீர் சோதனையிட்ட சுங்கப் பகுதியினர் கள்ளக்கடத்தல் பொருள்கள் எனக் கருதப்பட்ட 18 கைக்கடிகாரங்களையும் கைக்கடிகாரப் பட்டிகளையும் கண்டுபிடித்தனர்.

அலுமாரியில் இருந்த 8 கைக்கடிகாரங்களைக் கைப்பற்றிய சுங்கப்பகுதியினர் மேலும் சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டபோது முதலாளியின் இடுப்பிலிருந்து 10 கைக்கடிகாரங்களையும் கண்டுபிடித்தனராம். சுங்க கலக்டர் திரு. ராஜகுல[illegible] தலைமையில்சென்ற கோஷ்டி முதலாளியையும் கைது செய்து பொருள்களையும் கைப்பற்றியது. விசாரணை தொடர்கிறது.

உதவினர்

யாழ்ப்பாணம், செவ்.

ஏழைத் தொழிலாளி ஒருவரின் மரணச்சடங்குச்செலவிற்கு முன்னாள் எம். பி.யும் முன்னாள் யாழ். மேயரும், மாநகரசபை அங்கத்தவருமான திரு. அல்பிரட் துரையப்பா நேற்றுக் காலை நிதி சேர்த்துக்கொடுத்தார்.

சாம்ராஜ்ய...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எடுத்துக் கூறினார்.

பாகிஸ்தான் பிரதிநிதி அல்ஹாஜ் குலேசி சாம்ராஜ்ய நாடுகளின் அபிவிருத்தி குன்றிய நாடுகளின் வளர்ச்சிக்கு உதவக்கூடிய வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனத் தெரிவித்தார்.

சிங்கப்பூர் பிரதமர் திரு. லீகுவான்யூ உலகநிதி நிலைமைசீரடைவதற்கான பல முன்னேற்ற நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனக் கூறினார்.

கனடாப்பிரதமர் சாம்ராஜ்ய நாடுகளின் எதிர்காலம் தங்கியுள்ள அமைய தீர்க்கமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமெனத் தாம் கருதுவதாகத் தெரிவித்தார்.

லண்டன் மெல்பரோ மாளிகையில் இரு சாம்ராஜ்ய நாடுகளின் பிரதமர் [illegible]

சுவீப் டிக்கட் படுத்தும் பாடு?

யாழ்ப்பாணம், செவ்.

கல்வி நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு விற்பனைக்கு வந்திருக்கும் சுவீப் டிக்கட், அதிபர்களையும், ஆசிரியர்களையும் மேலும் தொல்லைக்குள்ளாக்கியுள்ளதாம்.

டிக்கட்டுகளை விற்பனை செய்வதில்லை என்றும், வாங்குவதில்லை என்றும் பல ஆசிரியர் சங்கங்களும் அறிவித்திருந்த போதிலும் வட பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு இந்த டிக்கட் விற்பனை செய்ய வழங்கப்பட்டிருக்கின்றது.

வழங்கப்பட்ட டிக்கட்டுகள் என்ன காரணம் கொண்டும், விற்கப்படவில்லையெனக் கூறி திருப்பிக்கொடுத்தால், அதை கல்வி இலாகாவினர் ஏற்றுக்கொள்ளமாட்டார்களென சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கல்லூரிகளின் கட்டட நிதி, வளர்ச்சி நிதி, விளையாட்டு நிதி ஆகியவற்றிற்கே மாணவர்களிடமிருந்தும் பெற்றோரிடமிருந்தும் நிதிசேர்க்க முடியாத ஆசிரியர்களும், அதிபர்களும் கஷ்டமடைந்துகொண்டிருக்கும் இவ்வேளையில், கல்வி அமைச்சின் இந்தப் புதிய வேலைகள் மேலும் தொல்லைக்கு மாட்டிவிடுவதாக ஆசிரிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. [ஈ. நி]

விவசாயத் துறையில் பரிசு பெற்ற மூவர்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் காரியாதிகாரிப்பிரிவில் நடாத்தப்பட்ட உருளைக் கிழங்கு உற்பத்தியில் முதலாவது பரிசை திருநெல்வேலியைச் சேர்ந்த விவசாயியான திரு. எஸ். அருணகிரிநாதர் பெற்றுள்ளார்.

இதற்கான பரிசு கோண்டாவில் கிராம அபிவிருத்திச் சபையினரால் நடாத்தப்பட்ட மனித உரிமைகள் தின பரிசளிப்பு விழாவில் வழங்கப்பட்டது. கோண்டாவில் சைவவித்தியாசாலையில் நடைபெற்ற இவ்விழாவுக்கு தலைமை ஆசிரியர் திரு. இ.பொ. குமாரசுவாமி தலைமைவகித்தார்.

உருளைக்கிழங்கு உற்பத்தியில் யாழ். காரியாதிகாரி பிரிவில் முதல் மூன்று இடங்களைப்பெற்றவர்கள் விபரம் வருமாறு:

1-ம் இடம்: திரு. எஸ். அருணகிரிநாதர் (திருநெல்வேலி) 2-ம் இடம்: பி. பஞ்சலிங்கம் [கோண்டாவில்] 3-ம் இடம்: திரு. பி. சின்னத்துரை [கோண்டாவில்].

இவர்களுக்கு அரசாங்கத்தால் சுமார் 100 ரூபா பெறுமதியான விவசாய உபகரணங்கள் பரிசாக வழங்கப்பட்டது.

[ஈ. நி.]

ஒரே இரவில்

இரு ஆண்களின் சடலங்கள் காணப்பட்டன

யாழ்ப்பாணம், செவ்.

ஒரே இரவில் ஒரு மைல் தூரத்துக்குள் இரு ஆண்களின் சடலங்கள் கிடக்கக் காணப்பட்டது நேற்று காலை யாழ். நகரில் இது பரபரப்பை ஏற்படுத்தியது.

ஓர் ஆணின் சடலம் யாழ்ப்பாண மாநகர சபை மலசல கூடத்துக்குள் இன்று அதிகாலை கிடக்கக் காணப்பட்டது. இது மாநகரசபையில் கடமையாற்றும் சந்தையா என்ற சிறு ஊழியரின் சடலம் என்று அடையாளம் காட்டப்பட்டது.

மற்ற ஆணின் சடலம் யாழ்ப்பாணம் '[illegible]' அருகாமையிலுள்ள தேவாலயத்தின் குளத்து நீரில்மூழ்கிக் கிடக்கக் காணப்பட்டது. இது இங்குள்ள முருகன் கட்டையர் என்பவரது சடலம் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. நேற்று நடைபெற்ற இவரது பேரனின் மரணச்சடங்கிற்குப் பின்னர் இவர் குளத்தில் குளித்ததாகவும். இதனால் இவர் நீரில்மூழ்கி மரணமாகியிருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணம் பொலிஸார் ஸ்தலத்துக்கு விரைந்துசென்று விசாரணையை மேற்கொண்டனர். மரண விசாரணை நடைபெறுகின்றது.

[ஈ. நி.]

கிராம சேவையாளர் தாக்கினாராம்

யாழ்ப்பாணம், செவ்

குடும்ப சகிதம் வீதியில் சென்றுகொண்டிருந்த ஒருவரை கிராமசேவையாளர் ஒருவர் தாக்கினாராம். தாக்குதலுக்குள்ளானதாகக் கூறப்படும் நபர் தற்போது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மனைவியுடன் தான் வீதியால் சென்றுகொண்டிருக்கையில் [illegible] கிராம சேவையாளரான கணபதிப்பிள்ளை செல்வராசா என்பவர் தன்னைத் தாக்கியதாக காயத்துடன் ஆஸ்பத்திரியிலிருக்கும் நபர் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார்.

தன்னைத் தாக்கிய கிராம சேவையாளர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாண அரசாங்க அதிபரையும் கிராமசேவையாளர்மீது சட்டநடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாணம் பொலிஸ் கப்டனையும் இவர் எழுத்துமூலம் கேட்டுள்ளார். ஈ. நி.

பிரயாணிகள் தப்பினர்

நெடுந்தீவு, செவ்வாய்

நெடுந்தீவு குறிகாட்டுவான் சேவையில் ஈடுபட்டு வந்த மோட்டார் படகு [illegible] நேற்று முன்தினம் காலை பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு நெடுந்தீவு துறைமுகத்தில் இருந்து புறப்பட்டு சில நேரத்தில் [illegible] போது எஞ்சின் கோளாறு ஏற்பட்டு தத்தளிக்கத் தொடங்கியது. தண்டேல்காரனின் திறமையால் திருப்பி மீண்டும் நெடுந்தீவு துறைமுகத்திற்கு மோட்டார் படகு கொண்டுவந்து சேர்க்கப்பட்டது. டீசல் அடைப்புக்காரணமாகவே எஞ்சின் கோளாறு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.